அக்டோபர் - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2045

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 58
பகுதி : 12

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரை தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் நடைபெற்ற இலக்கியச் சொற்பொழிவில் முனைவர்.த.கு.சுப்பிரமணியம் அவர்கள் சொற்பொழிவாற்றினார். உடன் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திருமிகு.கோச்சடை.இரா.குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திருமிகு.இரா.அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திருமிகு.சு.வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திருமிகு. க. முத்தையா பசும்பொன் அவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்.

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 58

பகுதி : 12

அக்டோபர் : 2014

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	ரூ. 6,000
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 10,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பொருளடக்கம்

மணற்கேணி	சி. நெடுஞ்செழியன்	6
தாய்நாட்டின் சிறப்பு	புலவர் சி. பாண்டுரங்கன்	10
"எரிபரந்தெடுத்தல்" – மறுசிந்தனை	தமிழாகரர் தெ. முருகசாமி	11
முல்லைப்பாட்டில் வாழ்வியல் நெறிகள்	முனைவர் ம. அருள்தாஸ்	15
முத்தொள்ளாயிரத்தில் அகம்புறம்	முனைவர் இ. காளீஸ்வரி	19
திருக்குறளும் நான்மணிக்கடிகையும் – கண்கள்	பா. இளவரசி	31
கற்பனையின் உச்சம்	புலவர் தா. குருசாமி தேசிகர்	39
சிலம்பும் குறளும்	ஆறுவிரல் ஐம்பொறி	41
மனிதரில் ஒரு புனிதர்	கவிவேந்தர் கா. வேழவேந்தன்	42

இதழ் மணம்

அன்புடையீர்,

வணக்கம். செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பை உலகெங்கும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் செவ்விலக்கியங்கள் சார்ந்த கட்டுரைகளைப் பெரும்பான்மையாகத் தாங்கிக் கொண்டு இம்மாத இதழ் வெளிவருகிறது.

கேணிநீர் - கல்வி என்பதன் ஒப்புமையின் அடிப்படையில் மனுதர்ம சாத்திரத்தையும் வள்ளுவத்தையும் இணைத்து எழுதிய வையாபுரிப்பிள்ளையின் கருத்தை மறுத்து, மணற்கேணி என்ற சொற்றொடர் வாயிலாக வள்ளுவரின் நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்தியுள்ள திரு. சி. நெடுஞ்செழியன் அவர்களின் கட்டுரை பாராட்டிற்குரியது.

எரிபரந்தெடுத்தல் என்னும் வஞ்சித்துறை விளக்கத்திற்கு எழுதப்பட்ட மறுப்புக் கட்டுரை ஒன்றனுக்கு, மறுசிந்தனையாக விளக்கக் கட்டுரை வழங்கியுள்ள தமிழாகரர் தெ. முருகசாமி அவர்களின் கட்டுரை வரவேற்பிற்குரியது. பாராட்டுக்கள்.

முல்லைப்பாட்டில் அமையப்பெற்றுள்ள வாழ்வியல் நெறிகளை முனைவர் ம. அருள்தாஸ் அவர்கள் தகுந்த சான்றுகளோடு வழங்கியுள்ளார்.

முத்தொள்ளாயிரத்தில் இடம் பெற்றுள்ள அகம் மற்றும் புறம் சார்ந்த கருத்துக்களை முனைவர் இ. காளீஸ்வரி ஆய்ந்து வகைப்படுத்தி எழுதியுள்ளமை சிறப்பிற்குரியது.

ஆய்வாளர் பா. இளவரசி அவர்கள், திருக்குறளிலும் நான்மணிக்கடிகையிலும் இடம் பெற்றுள்ள "கண்கள்" குறித்தான கருத்தமைவுகளைச் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார்.

சிவப்பிரகாசரின் பிரபுலிங்கலீலை என்னும் சிற்றிலக்கியத்தின் கற்பனைச் செறிவைத் தருமபுர ஆதீனப் புலவர் திரு. குருசாமி தேசிகர் அவர்கள் தெளிவுற காட்டியமை பாராட்டிற்குரியது.

ஐம்பொறிகள் நுகரும் ஐம்பொருட்கள் சிலம்பிலும் திருக்குறளிலும் அமைந்துள்ள பாங்கினை நுட்பமாக ஆராய்ந்து, திரு. ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் எழுதியுள்ள கட்டுரை படித்தின்புறத்தக்கதாகத் திகழ்கிறது.

மனிதரில் புனிதராகத் திகழும் லால்பகதூர் சாஸ்திரிகள் குறித்தும் மனிதர்கள் வணங்க வேண்டிய புனிதங்களுள் ஒன்றாகிய தாய்நாட்டின் சிறப்பு குறித்தும் மரபுக்கவிதைகள் இடம்பெற்று இதழை இனிக்கச் செய்கின்றன.

தமிழ்மொழியின் மேன்மையைத் தமிழறிஞர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் செந்தமிழ் இதழ்க் கட்டுரைகள் அமைந்து தமிழுக்கு நலம் பயக்கின்றன.

- ஆசிரியர் -

மணற்கேணி

சி. நெடுஞ்செழியன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழில் மிகச்சிறந்த அறநூலாகத் திருக்குறள் விளங்குகிறது. உலகளவில் பைபிள், திருக்குரானுக்கு அடுத்து அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்ற பெருமை திருக்குறளுக்கு உண்டு. சாதி, சமயம், இனம், மொழி, பால் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து உலகப் பொதுமறையாகத் திருக்குறள் திகழ்கிறது. சமஸ்கிருத மொழியில் உள்ள மனுதர்ம சாத்திரத்தைப் பின்பற்றி திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியுள்ளார் என்ற கருத்து சில ஆய்வாளர்களிடையே உள்ளது. வையாபுரிபிள்ளை மனுதர்ம சாத்திரத்திலுள்ள சில சூத்திரங்களை, சில குறட்பாக்களோடு ஒப்பிட்டு வள்ளுவர் மனுவுக்குச் சந்தேகத்துக்கு இடமின்றி நன்றிக்கடன்பட்டிருக்கிறார் எனக் கூறியுள்ளார். இக்கருத்தை, கமில் சிலபள் என்பவர் தனது 'முருகனின் புன்னகை' என்ற நூலில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார்.

வையாபுரிபிள்ளை மனுதர்மசாத்திரத்தின் கல்வி எனும் தலைப்பிலான அத்தியாயத்திலுள்ள "மண்வெட்டியால் தோண்ட நீர் ஊற்றெழுவது போன்று தனது வழிபாட்டாலே ஒருவன் குருவிடமிருந்து வித்தையைப் பெறுகிறான்" (2:218) என்ற சூத்திரத்தை,

> தொட்டணைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
> கற்றனைத்து ஊறும் அறிவு (கு: 396)

என்ற குறளோடு ஒப்பிட்டுள்ளார். வள்ளுவர் கருத்தை ஆழ்ந்து ஆராய்ந்தால் மனுவின் கருத்து வேறு, வள்ளுவரின் கருத்து வேறு என்பது தெரிய வரும்,

மனு "தோண்ட, தோண்ட நீர் ஊறுவது போல" எனப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வள்ளுவர் "மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போல" எனக் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர் 'கேணி தோண்டுவது போல' என மனு போல் குறிப்பிடாது, 'மணற்கேணி தோண்டுவது போல' எனக் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. ''மணற்கேணி'' குறித்து ஆராய்ந்தால் வள்ளுவரின் நுண்மாண் நுழைபுலம் நன்கு விளங்கும்.

பொதுவாகக் கிணறு தோண்டப்படும் போது குறிப்பிட்ட ஆழம் சென்ற பிறகு மணல் வருகின்றதா எனச் சோதிக்கப்படுகிறது. மணல் கிடைத்துவிட்டால் கிணறு தோண்டுவது நிறுத்தப்படுகிறது. மணல் வரவில்லை என்றால் மணல் கிடைக்கும் வரை கிணற்றின் ஆழம் அதிகரிக்கப்படுகிறது. மணலானது நீரைத் தன்னிடம் சேமித்து வைத்துக் கொள்ளாது வெளியே விட்டுவிடும் இயல்புடையது. 'மணல்' என்பதற்குத் தமிழ் அகராதி "நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மையற்றதும் பொடியாக இருப்பதுமான துகள்" என்ப பொருள் தருகிறது.

ஆகவே, நீர் அதிகமாக ஊறும் இடம் மணற்பாங்கான பகுதி எனத் தெரிகிறது. கிணறு வெட்டும்போது மணல் கிடைக்கும் வரை தோண்டப்பட்டக் கிணறாக இருந்தால் மட்டுமே நீர் அள்ள அள்ள ஊறிக் கொண்டேயிருக்கும். "மணலில் உள்ள துகள்களின் பருமன் பெரிதாக இருப்பதனால் அவற்றின் துகள் இடைவெளி அகன்றிருக்கும். இவ்விடையில் தங்கும் நீரின் அளவானது நுண்நய மண்துகள் இடைவெளியில் உள்ள நீரைவிட மிகுதி. கிணறு தோண்டும்போது மணற்பாங்கான வடிவிலேயே நீர் மிகுதியாகக் காணப்படும். ஆகவே மணல் படிவு கிடைக்கும் வரை கிணற்றின் ஆழம் கூடுதலாக்கப்படும். திறந்த கிணறு அமைப்பதிலும் இவ்வுத்தி மேற்கொள்ளப்படுகிறது. மணலே சிறந்த ஊற்றுக்கண் ஆகும் என்ற நீரியல் உண்மை கூறப்பட்டது" என்ற திருவேங்கடசாமி கருத்து குறிப்பிடத்தக்கது.

கிணறு தோண்டும்போது மணல் கிடைக்காத இடங்களில் பாறைகளுடன் கிணறு முடிவடையும். இது பாறைக் கிணறு எனப்படும். பாறைக் கிணற்றில் நீர் எடுத்தால் மீண்டும் பழைய நீர்நிலையை அக்கிணறு அடைய பல நாட்கள், பல மாதங்கள் ஆகலாம். ஆனால் மணற்கேணியில் எவ்வளவு நீரை எடுத்தாலும் உடனடியாகப் பழைய நீர் நிலையை அக்கிணறு அடைந்துவிடும். இதன் காரணமாகவே வள்ளுவர் 'கிணறு' எனப் பொதுவாக அழைக்காமல் 'மணற்கேணி', எனச் சுட்டியுள்ளார். ஆனால் மனு "தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போல" என்று பொதுவான கிணற்றைக் குறிப்பிடுகிறார்.

ஊற்று நீர் பூமிக்குள் உள்ளது. அவ்வூற்றுநீரை மண் மூடியுள்ளது. நீரைப் பெற மண்ணை வெட்டி எடுக்க வேண்டியுள்ளது. அறிவும் மனிதரிடம் உள்ளது. அறியாமை அறிவை மறைத்துள்ளது. அறியாமையை நீக்கினால் அறிவைப் பெறலாம். அறியாமையை நீக்க

கற்க வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. "கேணியில் மணலடியில் நீர் உள்ளது. ஆயினும் தோண்ட வேண்டும். அறிவும் மக்களுக்கு இயல்பாகவே உள்ளது. ஆயினும் கற்க வேண்டும். கற்றால்தான் அந்த அறிவு வெளிப்படும். இக்காலத்து உளநூலகமும் அறிவு வெளியே இருந்து உள்ளே புகுத்தப்படுவது அன்று என்றும் உள்ளே இருந்து விளக்கிக் கொணரப்படுவது என்றும் கூறுவர்" என்ற திரு.வி.க.வின் கருத்து குறிப்பிடத்தக்கது. 'எஜுகேசன்' (Education) என்ற ஆங்கிலச் சொல் 'எஜுகரே' (Educare) என்ற லத்தீன் மொழிச் சொல்லின் திரிபாகும். 'எஜுகரே' (Educare) என்றால் 'உள்ளிருப்பதை வெளிக் கொணர்வது' எனப்பொருள்.

வள்ளுவர் கூறுவது போன்று கல்வியறிவைப் பெற கற்க வேண்டும் என மனு கூறவில்லை. மாறாக, குருவை வழிபடவேண்டும் எனக் கூறியுள்ளார். இது குருகுலக் கல்வி முறைக்கு மட்டுமே பொருந்துகிறது. இக்கால கல்வி முறைக்குப் பொருந்தவில்லை. ஆனால் வள்ளுவரின் கருத்து எக்காலத்திற்கும், எந்தக் கல்விமுறைக்கும் பொருந்துவதாக உள்ளது. "பொதுவாக வள்ளுவர் கல்வித்துறை வளர்ச்சியின் அடிப்படையில் காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் மாறும் தன்மை கொண்ட விஷயங்கள் (Details) பற்றி பேசுவதைத் தவிர்த்திருக்கிறார். அதனால் கல்வித் துறையில் ஏற்பட்ட புயல் வேக மாற்றங்கள் அவரது கருத்துக்கள் எவற்றையும் மறுப்பனவாக அமையவில்லை" என்ற வ.செ.குழந்தைசாமியின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

"கல்வியின் தேவையையும் பயனையும் நன்குணர்ந்தவர் நம்முடைய திருவள்ளுவர். திருக்குறளின் பொருட்பாலில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, புல்லறிவாண்மை என்ற ஐந்து அதிகாரங்களின் வழியாக அவர் இவற்றை அறிவுறுத்தியுள்ளார். கல்வியைப் பற்றி ஒரு தெளிவான கொள்கையை வள்ளுவர் வகுத்துள்ளார்" என க.த.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

கற்றல் செயல் முடிவுக்குக் கால எல்லை கிடையாது. கற்றல் கருவறை முதல் கல்லறை வரை தொடரும் செயலாகும் என்பதே "தொட்டனைத்தூறும் மணற்கேணி" என்ற குறள் வழி வள்ளுவர் வலியுறுத்தும் கருத்தாகும். "கற்றவனாவதற்கு எவ்வளவு கற்றால் போதும் என்ற கணக்கில்லை" என நாமக்கல் கவிஞர் தெரிவித்துள்ளார்.

"மணல் கிணற்றில் தோண்டிய அளவுக்குத் தான் நீர் ஊறும். அதுபோல படிக்கும் அளவுக்குத்தான் அறிவு பெருகும்" என்ற கருத்து

''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'' என்ற மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. கல்வியை மணற்கேணியோடு ஒப்பிட்டு பல அரிய தகவல்களை விளக்கிய திருவள்ளுவர் நுண்மாண் நுழைபுலமிக்கவர் என்பது நிரூபணம் ஆகிறது.

வள்ளுவர் கல்விக்கென ஐம்பது குறட்பாக்களைப் படைத்திருந்தாலும் கல்வி பற்றி பேசப்படும்பொழுதெல்லாம் 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' என்ற குறளே அதிகமான அறிஞர்களால் மேற்கோளாக எடுத்தாளப்படுகிறது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல 'மணற்கேணி' எனும் வள்ளுவரின் ஒற்றைச் சொல்லே திருக்குறள் மனுவின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதைத் தெரிவிக்கிறது. ஆகவே வள்ளுவர் மனுவின் கருத்தைப் பின்பற்றி திருக்குறளை உருவாக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

"அறநூலாசிரியர்களின் சிந்தனை ஓட்டத்தில் மொழி வேறுபாடின்றி ஒரு சில கருத்துக்கள் ஒன்றிணைந்து இருப்பது இயற்கையானதொரு நிகழ்வாகும். பொதுவாகப் பல்வேறு மொழிகளிலும் நூல் கூறும் அறம் பலவும் பெரும்பாலும் ஒத்திருக்கும். பொய்யாமை, கொல்லாமை, வெஃகாமை, கள்ளாமை போன்ற பல ஒழுக்கங்கள் எல்லோருக்கும் எஞ்ஞான்றும் எந்நிலத்தும் பொதுவாகும். அதனாலே பல்வேறு மொழிகளிலும் அறநூல்கள் ஒத்திருப்பது இயற்கையாகும். அது கொண்டு அவ்வற நூல்கள் ஒன்றிலிருந்து ஒன்று இரவல்கொண்டது என்றும் அவற்றிடையே தொடர்பு இருத்தல் வேண்டுமென்றும் கூறுவது தவறாகும்" என நாவலர் சோமசுந்தர பாரதியார் குறிப்பிட்டுள்ளார். திருக்குறளுக்கும் மனுதர்ம சாத்திரத்திற்கும் ஒரு சில ஒற்றுமைகள் இருந்தாலும் அடிப்படையிலேயே பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டுள்ளன எனலாம். 'பிறப்பொக்கும்' என்ற வள்ளுவரின் கருத்துக்கு மாறாக வருணாசிரமக் கொள்கையை முன்வைப்பது மனுதர்மசாத்திரம் ஆகும்.

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"

என்ற மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் கருத்து குறிப்பிடத்தக்கது ஆகும்.

"தாய்நாட்டின் சிறப்பு!"

(எண்சீர் விருத்தம்)

- புலவர். சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

தாய்நாடு நலமதனால் எல்லோரும் நலமே!
தந்தையர் நாட்டுயர்வால் மகிழ்ச்சிவெள்ளம் உளமே!
சேய்போல நாம்வளரக் காத்துவக்கும் தினமே!
சிறந்தகல்வி உலகுபெற வழிதிறக்கும் இடமே!
வேய்கூரை நேர்நலத்தை உவந்தளிக்கும் பாரதம்!
வானவில் நேர் பன்மையில் ஒருமைகாண் இந்தியா!
மேய்பசுவும் உவந்துவாழும். விளைநெல்லோ பச்சை
மரகதத்தின் நிறம்கூட்டி. மகிழ்ச்சியாழி நல்கும்!

'இமயம் நேர் குணமுண்டு. குமரிகடல் நேராம்
ஆக்கப்பூர்வ அறிவியலின் பரப்புண்டு மற்றும்
மமதைஇல். வாழ்வுண்டே' என வாழக் கற்போம்!
'மாறாத நல்மழைதான் ஆண்டாண்டும் உண்டே.
சுமக்கலாகா விளைச்சலுண்டு. சுவைவடிவாம் கரும்பு.
சுவைகனிகள் மீஉண்டு' என மரங்கள் காப்போம்!
கமலமலர் விளக்குவிழை அடர்வனங்கள் வைப்போம்!
கன்னகுழி அழகுகூட்டும் சிரிமழலைக் காப்போம்!

நூறுமொழி பேசுவாள்எம் இந்தியத்தாய் ஆனால்.
நுவல் ஒருமை உண்டதுதான். 'எல்லோர்க்கும் நன்மை!'
சேறுநிலை நிலங்களெல்லாம் குற்றேவல் செய்யச்
சிரித்துவப்பாள் எம் அன்னை எல்லோர்க்கும் ஈந்தே!
ஆறுகுளம் நீர்வழிந்தே. அடர்பசுமை ஆக்கி
ஆழியிலே சேர்வது போல் இவள்நோக்கும் ஒன்றே:
'பேறுபல பெற்றுவாழ்க பெருமைசேர் மக்கள்.
பேருவகை கொண்டுவாழ்க பெரிதளித்தே அன்பை?'

உலகிற்கே படியளக்க வரமுண்டு. வாழ்க!
உயர்கலைகள் போற்றிவாழ்ந்தே உயர்இதயம் வெல்க!
நலமனைத்தும் உலாவும்நல் உலாமேடை மானும்
நாடுகாக்க நலம்பெற்றே வாழ்வாங்கு வாழ்க!
திலகம்நேர் சுதந்திரத்தைப் போற்றிக்காத்து. வெல்க!
தீவுசூழும் ஆழிபோல. வாய்ப்பெல்லாம் வந்தே.
நலமெல்லாம் நன்கோங்க நமக்கருள்க இறையே!
நாற்றிசையும் புகழ்மணக்க வாழியநம் நாடே!

"எரிபரந்தெடுத்தல்" – மறுசிந்தனை

தமிழாகரர்
தெ. முருகசாமி
புதுச்சேரி

வஞ்சித்திணைப் போர்த்துறைகளில் "எரிபரந்தெடுத்தலும்" ஒன்று. 1. இயங்குபடை அரவம் 2. எரிபரந்து எடுத்தல் 3. வயங்கல் எய்திய பெருமை 4. கொடுத்தல் எய்திய கொடை 5. அடுத்தூர்ந்தட்ட கொற்றம் 6. மாராயம் பெற்ற நெடுமொழி 7. பொருளின்று உயத்த பேராண் பக்கம் 8. வருவிசைப் புனலைக் கற்சிறைப்போல ஒருவன் தாங்கிய பெருமை 9. பிண்டம் மேய பெருஞ் சோற்றுநிலை 10. வென்றோர் விளக்கம் 11. தோற்றோர் தேய்வு 12.குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளை 13. அழிபடை தட்டோர் தழிஞ்சி என்பதோடு வஞ்சிப் போர்த்துறைகள் பதின்மூன்றாம்.

இப்பதின்மூன்றில் இரண்டாவதாகக் கூறப்பட்டது எரிபரந்தெடுத்தல். இதன் விளக்கத்தைப் பலரும் கூறுகையில் "பகைவர் நாட்டிற்கு எரியூட்டல்" என்பதாகக் கூறினர். இக்கருத்தைத் திருமதி வாணி அறிவாளன் என்பவர் மறுத்து. 2014 ஏப்ரல் திங்கள் செந்தமிழ்ச்செல்வியில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவரின் மறுப்புக்கட்டுரை மறுசிந்தனைக்குரியது என்கிறது இந்தக்கட்டுரை.

போர் எனக் கேட்டதும் திரளும் வீரர்கள் தீப்பந்தம் ஏந்திப் புறப்படுதலே எரிபரந்தெடுத்தல் என்பது கட்டுரையாளர் கருத்து. இக்கருத்தை அரண் செய்ய தொல்காப்பியர், எரிபரப்புதல் என்றோ எரியூட்டல் என்றோ எறிவைத்தல் என்றோ கூறாமல் எரிபரந்தெடுத்தல் என்ற சொற்றொடரே சான்று என்றும் எடுத்தல் என்பதற்கு அகராதியில் உயர்த்துதல், தாங்குதல், தூக்குதல் எனப் பொருள் உணர்த்தும் வழி, எடுத்தல் என்பதற்கு முன்னர் எரிபரந்து என்ற தொடர் உள்ளதால் மேற்படியான அகராதிப் பொருளே பொருந்தும் என்பதும் கட்டுரையாளரின் கருத்தாக உள்ளது.

மேலும் எரியூட்டல் பற்றி 12 ஆவது குறிப்பான கொற்றவள்ளைத் துறை கூறுவதால் இரண்டாவதான எரிபரந்தெடுத்தல் வேறு என்றார் கட்டுரையாளர். வஞ்சிப்போர் முறைகள் வரிசை பிறழாமல் கூறப்பட்டிருப்பதால் ஆரவாரித்துப் புறப்பட்ட அளவிலேயே எரியூட்டல் ஏற்புடைத்தன்று என்பதுதான் கட்டுரையாளரின் கருத்தாகத் தெரிகிறது. இந்த வரிசை முறை வெட்சிப் போரிலும் கூறப்பட்டுள்ளது போன்றது என்றும் கட்டுரையாளர் கருதுகிறார்.

கட்டுரையாளர் கூறும் போர் வரிசைமுறை என்ற கருத்து ஏற்புடைத்தன்று, ஏனெனில் பகை நாட்டைக் கவரச் செல்லும் வீரர்களுக்குக் கொடை கொடுப்பதாக நான்காவதாகக் கூறுவது எந்த வகையில் பொருந்தும்? வெற்றி பெற்றதும் கொடையா? போருக்குப் புறப்படும்போதே கொடையா? கட்டுரையாளர் குறிக்கும் வெட்சிப்போரில் ஆக்களைக் கவர்ந்து வந்தபின்னரே பாதீடு எனப் பகுத்துக் கொடை கொடுத்ததாக உள்ளது. இந்தப் போர் முறைத் தொடர்ச்சியைப் பிறவற்றில் காண இயலாது என்கிறார் தமிழ்ச்செம்மல் தமிழண்ணல் (தொல்காப்பிய மூலமும் கருத்துரையும் - மீனாட்சி புத்தக நிலையம், மதுரை).

அதாவது போர்நிகழ்ச்சியின் தொடர்ச்சியை முதற்போரான வெட்சியில் காணலாமேயன்றி வெட்சியல்லாத வஞ்சி, உழிஞைப் போர்களில் காணமுடியாதென்பது தமிழண்ணல் கருத்து. (தொல். நூல், பக்கம். 314) அண்ணலின் கருத்துப்படிப் பார்த்தால் வஞ்சிப் போரின் தொடக்கத்தில் கொடையென நாலாவதாகக் கூறினாலும் வெட்சியில் கூறியாங்கு போரின் முடிவில் கொடுப்பதாகவே கருதவேண்டும்.

இதே முறையைத்தான் அண்ணலார் உழிஞை பற்றிக் கூறுகையில் (ப. 320) "உழிஞையின் போர் முறைகள் முற்ற முடிய நடக்குமென்றோ, தொடர்ச்சியாக நடக்குமென்றோ கருத வேண்டாம்" என்பதால் வெட்சி தவிர்த்த பிற போர் நிகழ்வுகள் வரிசையாகக் கூறியதாய்க் கருதவேண்டாம் என்பதும் கூறியவற்றை முன்பின்னாக, பின்முன்னாகக் கருதுவதே தகும் எனலாம். ஆக இந்த இயல்பான கருத்தின்படி "எரிபரந்தெடுத்தல்" என்பது வஞ்சிப் போரின் இன்றியமையாததென்பதால் எரியூட்டல் முன்னர்க் கூறப்பட்டது.

அடுத்து, கட்டுரையாளர் "கொற்றவள்ளையை" எரியூட்டலாகக் கருதிக் கொண்ட பிழையால் எரிபரந்தெடுத்தலை எரியூட்டலன்று என்கிறார். கொற்றவள்ளை - எரியூட்டலன்றுதான். வள்ளை என்பது உரற்பாட்டு. வெற்றியடைந்ததும் புகழ்ந்து பாடுதலுக்குக் கொற்றவள்ளை என்று பெயர். இப்பொருளன்றித் தோற்றவன் வென்றவனுக்கு வழங்கும் திறைப்பொருட்கும் கொற்றவள்ளை என்று பெயர்.

ஆக எரியூட்டல் என்ற கருத்து கொற்றவள்ளைக்கு இல்லை எனத் தெளிவாகத் தெரியும்போது கட்டுரையாளர் 13ஆவதான தழிஞ்சிக்கு முன்னதாகக் கூறிய கொற்றவள்ளையைத் தொல்காப்பியர் எரியூட்டலாகக் கூறுகிறார் எனத் தம் பிழையைத் தொல்காப்பியர் மீதும் ஏற்றுகிறார். இக்கருத்து குன்றாச்சிறப்பின் கொற்றவள்ளை என்றதன் அடைமொழிப் பொருளால் "எரியூட்டல்" என்ற கருத்துப் பொருந்தாம் என்க!

எந்தக் குறைபாடும் இல்லாத சிறப்பினை உடைய என்னும் கருத்து எரியூட்டுதலாகிய அழிவுசெய்தலுக்கு எங்ஙனம் பொருந்தும்? எந்த உரையாசிரியர் கொற்றவள்ளையை எரியூட்டல் எனக் கூறியுள்ளார் என்பதைக் கட்டுரையாளர் எடுத்துக் காட்டுவாரா?

எரிபரந்தெடுத்தல் என்ற தொடரில் எடுத்தல் என்பதற்குமுன் உள்ள எரிபரந்து என்றது தீப்பந்தம் ஏந்திச் செல்வது என்கிறார் கட்டுரையாளர். உயர்த்துதல், தாங்கல், தூக்குதல் என்ற அகராதிப் பொருளின்படித் தீப்பந்தம் தாங்கித் தூக்குதல் என்பதே பொருந்தும் என்கிறார்.

ஆனால், அகராதிப் பொருள்களில் கட்டுரையாளர் குறித்த பொருளுடன் எடுத்தல் என்பதற்கு எழுப்புதல், திரட்டுதல், எடுத்து வீசுதல் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளதால் கட்டுரையாளர் தமக்குச் சாதகமாக உள்ளதை மட்டும் கொண்டார் என்பதால் பகைவர் நாட்டில் பரந்து சென்று (பல இடங்களுக்குச் சென்று) எரிவைத்தல் அல்லது எரியை வீசுதல் என்ற கருத்துக்கும் பொருள் பொருத்தம் உண்டன்றோ? அந்த வகையில் தீப்பந்தம் எடுத்துச் செல்லல் என்பது பொருந்துவதாக இல்லை.

எரிபரந்தெடுத்தல் என்பதற்கு நச்சினார்க்கினியர் பகைப் புலத்து பரந்து சென்று (எங்கும் சென்று) எரியை எடுத்துச் சுடுதல் என்கிறார். இதனால் நாட்டை எரியூட்டல் என்ற கருத்துக்கு இயைபாக உள்ளது. நச்சரின் கருத்துக்கு அவர் புறநானூற்றின் 7, 16ஆம் பாடல்கள் இரண்டையும் எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார். காட்டப்பட்ட பாடல்கள் கொற்றவள்ளைப் பொருண்மையவேனும் பாடலின் உட்பகுதி பலவும் துறையாய் வருதலின் எரிபரந்தெடுத்தற்கும் உதாரணமாயின என்பது நச்சர் தரும் விளக்கமாகும்.

இவ்விளக்கத்தைப் பேராசிரியர் ஆ.சிவலிங்கனாரின் உரைவள நூலின் (புறத்திணைப் பகுதி 1) பக்கம் 141ல் எழுதிக்காட்டும் கருத்து ஈண்டைக்கு ஆய்வுக்குரியதாகும். "கொற்றவள்ளை" என்பது அரசன் புகழ்கிளந்து பகைவர் நாடு அழித்தற்கு இரங்குவது. சுட்டிய 7, 16 ஆம் புறநானூற்றுப் பாடல்கள் அத்துறை படுவன. என்றாலும் ஒரு துறையில் பலதுறை வருவது உண்டாதலின் சுடுதீ விளக்கம், ஊர் சுடு விளக்கம் என வந்தவை உள்துறையான எரிபரந்தெடுத்தலுக்காம் என்பது உரைவள நூலாசிரியர் கருத்து.

இக்கருத்து எதை வற்புறுத்துகிறதெனில் 7,16 ஆம் புறப்பாடல்கள் பகைவர் நாட்டை அழித்த அரசன் புகழைப் பாடும் கொற்றவள்ளை-யானாலும் எரியூட்டுவதான அழிவையே மிகுதியும் கூறுவதால்

இப்பாடல்கள் (7,16) எரிபரந்தெடுத்தற்கு உதாரணமாயின என்பது கருத்தாம்.

எனவே தொல்காப்பியர் கொற்றவள்ளைக்குக் குன்றாச்சிறப்பின் என்ற அடைமொழியாலும் நச்சினார்க்கினியரின் விளக்கத்தை விளக்கிய ஆ.சிவலிங்கனாரின் கருத்தாலும் கொற்றவள்ளை எரியூட்டலன்றாம் என்க! இந்த நுட்பமான கருத்தின் அடிப்படையிலேயே பாடாண்திணையில் "கொற்றவள்ளை ஓரிடத்தான" எனத் தொல்காப்பியர் பாடப்படும் ஆண்மகனின் சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக நூற்பா செய்துள்ளார். இந்நூற்பாவுக்கு உரை கண்ட இளம்பூரணர் துறை கூறல் கருத்தாயின் வஞ்சி என்றும் புகழ்தல் கருத்தாயின் பாடாண்திணை என்றும் விளக்கம் தந்துள்ளார்.

நச்சினார்க்கினியரும் இதனை மக்கட்கே உரிய புகழ்ச்சியில் வஞ்சிப் பாடாண் என்றார். ஆக, "கொற்றவள்ளையைப் புகழ்தலாகவே கருதப்பட்டதால் எரியூட்டல் என்ற கருத்தைக் கட்டுரையாளர் யாண்டுணர்ந்து கூறினார்? எனப் புரியாத புதிராக உள்ளது". ஆக, கொற்றவள்ளையை எரியூட்டலாகக் கற்பிக்காத நிலையில், வஞ்சியின் எரிபரந்தெடுத்தல் - பகைநாட்டைத் தீயிட்டுக் கொளுத்தலேயாம் என்க!

அடுத்து இரவுக்காலங்களில் வீரர்கள் தீப்பந்தம் எடுத்துச் செல்வதாகக் கூறும் அகநானூற்றுப் பாடலும் (239) சிலப்பதிகார அடிகளும் இரவுக்காலத்திற்கு மட்டும் பொருந்துவன அல்ல, பகலில் தங்குமிடங்களில் உணவு சமைக்கத் தீப்பந்தம் உதவலாமன்றோ! எனவே இரவில் புறப்படுங்கால் விலங்குகளை ஓட்ட எனப் பொருந்தினாலும் அவர்களின் நோக்கம் எதிரி நாட்டைத் தீக்கிரையாக்குதலேயாம்.

மேலும், கட்டுரையாளர் கட்டுரையின் இறுதியில் எரிபரந்தெடுத்தலாகிய இத்துறை தொல்காப்பிய வஞ்சித்திணைக் குறித்தது எனக் கூறினாலும், கட்டுரையாளர் காட்டிய அகநானூற்றுப் பாடல் (239) வெட்சிப்போரின் போது எரிஏந்திச் சென்றதாகக் குறிப்பது, முன்னுக்குப் பின் முரணாகத் தெரிகின்றதன்றோ! ஆக, எரிபரந்தெடுத்தல் என்பது தீப்பந்தம் ஏந்திச் செல்வதன்று என்பதும், அதன்பொருள் எரியூட்டல் என்பதும் கொற்றவள்ளை எரியூட்டலன்று என்பதும் தெளிவாகத் தெரிவதால் கட்டுரையாளர் கருத்து மறுப்பான மறுசிந்தனைக்குரித்தாம் என்க!

முல்லைப்பாட்டில் வாழ்வியல் நெறிகள்

முனைவர். ம. அருள்தாஸ்
பூம்புகாா் கல்லூரி (தன்னாட்சி)

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் தன்மையுடையது. அவ்வாறு பிரதிபலிக்கவில்லை என்றால் அவ்விலக்கியம் காலப்போக்கில் அழிந்து விடக்கூடும். பண்டைய தமிழ் இலக்கியங்கள் இயற்கைத் தன்மை, அழகியல், மக்களின் எதார்த்த உணர்வு ஆகியவற்றை எடுத்தியம்புவதுடன் மனித இனம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறத்தையும் வலியுறுத்துவதால் தான் இன்றும் நிலைபெற்று உள்ளன.

பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளை (103) உடையது முல்லைப் பாட்டு. இஃது அகப்பாட்டாயினும் புற வாழ்விற்கான அறப்பண்புகளையும் கொண்டுள்ளது. இதனைச் செய்யுளின் தொடக்கமே காட்டுகிறது. தான் மட்டும் வாழாது உலகும் வாழ வேண்டும் என்ற உணர்வை "நனந்தலை யுலகம்" என்னும் தொடர் வெளிப்படுத்துகிறது.

முதல், கரு, உரி என்ற மூன்றாக வகுத்து வாழும் மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என்று பாகுபடுத்தி இயற்கையுடன் இயைபு-படுத்தியுள்ளனர். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அன்பு கொண்டு திருமணம் செய்து இல்லறம் நடத்திவருவது அகம் என்றும், மக்கள் அரசியல் வாழ்விலும், போரிலும் ஈடுபடுவது புறம் என்றும் பெயர் பெற்றன. அகத்திற்கு அப்பாற்பட்டது புறம் எனப் பொற்கை ஆதிரை வரையறுத்துள்ளார். முல்லை நில வாழ்வியலில் சங்க கால வாழ்க்கை நெறிமுறைகள் அனைத்தும் சுட்டப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் முதன் முதலில் மக்கள் வாழத் தொடங்கிய இடம் காடும் காடு சார்ந்த இடமும் ஆகிய முல்லை நிலமாகவே அமைந்துள்ளது. இப்பகுதியில் வாழத் தொடங்கிய மனிதன் தனது வாழ்க்கை நெறியை ஒவ்வொன்றாக அமைத்துக் கொண்டு வாழ்ந்தான் என்பதே முல்லைப்பாட்டின் கட்டமைப்பாக அமைந்துள்ளது.

அன்பின் ஐந்திணைகளைக் கொண்ட அகவாழ்வு களவு, கற்பு எனும் இரு நிலையைப் பெற்றுள்ளது. திருமணத்திற்கு முன் நிகழக் கூடிய தலைவன், தலைவியின் காதல் ஒழுக்கம் களவு எனப்படும். களவின் முடிவு கற்பு என்பதையே அகத்திணை வலியுறுத்துகிறது. களவில் மறைந்து ஒழுகும் காதலர் வெளிப்படையாகக் கணவன், மனைவியாக இல்லறம்

நடத்துதல் கற்பு எனப்படும். தொல்காப்பியர் கற்பெனப்படுவது கரணமொடு புணர எனக் கற்பின் இலக்கணத்தை வரையறுக்கிறார். இவ்வாழ்வில் திருமணம், கற்புப் பிரிவு, பொருள் வயிற் பிரிவு, பருவங்கண்டு வருந்துதல், தலைவன் வரவு, பரத்தையிற் பிரிவு, ஊடல் ஆகியவை நிகழ்கின்றன. முல்லை நிலத்தில் மகளிர் வாழ்க்கையில் தனித் தன்மைகள் அமைந்திருந்ததையும் இதன் மூலமாகவும் அறிய முடிகின்றது. முல்லை நிலத்தின் வாழ்க்கை அமைப்பு இயற்கையோடு கூடியதாக அமைந்திருந்ததையும் முல்லைப்பாட்டு மூலமாக அறியலாகிறது.

முல்லைத் திணைக்கு இருத்தலும் அதன் நிமித்தங்களும் உரிப்பொருளாவன (அகத். நூ. 16). முல்லை என்பது இருத்தல், கற்பினின்று வழுவாது பொறப்புடன் இருத்தல், உலகம் வாழவும், வறியவருக்குக் கொடுத்தும் அறத்துடன் இல்லறம் நடத்துவதும் கற்பென்பர். இக்கடமையின் பொருட்டுத் தலைவன் பிரிவதும், அவன் வரும் வரையிலும் தலைவி ஆற்றியிருத்தலுமே இருவருக்குமுள்ள கடமையாகும்.

இப்பிரிவு இன்றியமையாத உலகியல் அறமாகும். இவர்கள் தம் தமது கடமைகளைச் செவ்வனே செய்வதே கற்பு என்றும் எடுத்துரைக்கின்றது முல்லைப்பாட்டு. தலைவனுக்காக இருத்தலும், இருத்தல் நிமித்தமும் மேற்கொள்ளும் தலைவி தனது வாழ்வின் தனித்தன்மைகளைப் போற்றிப் பாதுகாக்கும் கடமை கொண்டவளாகவும் காணப்படுகின்றாள். தலைவியின் பண்பு மேலீட்டை அச்சம், மடம், நாணம் என்பதையும் தாண்டி கற்பு என்ற தனித்தன்மை விளங்குவதையும் அறிய முடிகின்றது. கணவன் போர்ப் பிரிவு மேற்கொண்டு செல்லும் போது குறிப்பிட்டக் காலத்தில் திரும்பி வருவான் என்பதை உறுதி செய்ய முடியாது. சில நேரங்களில் போரில் இறந்து போவதும் உண்டு. அத்தகைய சூழ்நிலைகளிலும் தலைவி பொருத்து இருப்பது என்பது மிக நீண்ட பிரிவுத் துன்பத்தை உண்டாக்குவதுடன் கைம்மைத் தன்மை உண்டாவதற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துவிட்டது என்பதனையும் முல்லைப்பாட்டின் மூலமாக அறிய முடிகின்றது.

இத்தகைய கற்பில் பொருள் வயிற்பிரிவினை இந்நூல் மொழிகின்றது. தலைவன் தலைவியின் இல்லற வாழ்க்கை உடனிருந்து துய்க்கும் இன்பியல் வாழ்க்கையாக நீடிக்காது. பொருள் தேடுவதற்கு வழியாய் அமைந்த போர்த் தொழிலைத் தலைவன் மேற்கொள்கிறான். பொருள் தேடத் தலைவன் மட்டுமே செல்ல வேண்டும். இது இல்லறத்

தலைவனின் கடமையாகும். இப்பரிவு பற்றித் தொல்காப்பியர் (அகத் நூ.27.35) பொருள் வயிற்பிரிதலும் உண்டு என்கிறார்.

அவ்வாறு செல்லும் தலைவன் தலைவியை நோக்கி இத்துணை நாளில் மீண்டு வருவேன். அதுவரையிலும் ஆற்றியிரு என்று கூறிச் செல்கிறான். வஞ்சிப்போர் செய்யச் சென்ற தலைவன் பாசறையில் இருக்கிறான். அவளின் அறநெஞ்சத்துடன் கூடிய மனநிலையை இவ்வடிகள் காட்டுகின்றன.

"மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது
எடுத்தறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்பு பதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
....
அரசிலிருந்து பனிக்கு முரமுழங்கு பாசறை
இன்னுயில் வதியு நன்"

பாசறையில் படுக்கையில், முந்திய நாள் போரில் பகைவன் எறிந்த வேலினால் புண்பட்டு, பெண்யானைகளை மறந்த களிறுகளை நினைத்தும், பகைவருடைய யானைகளின் கைகள் கீழே விழும்படி வெட்டி வீழ்த்திய தன் போர் மறவர்களை நினைத்தும், அவர்கள் பெற்ற பெருமையால் அவர்கள் அணிந்த வஞ்சிமாலையை எண்ணியும், செஞ்சோற்றுக் கடன் கழித்துப் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த ஒப்பற்ற வீரர்களை நினைத்தும், பகைவரின் தோற்கருவிகளைக் கிழித்துக் கொண்டு உடலைப் புண்ணாக்கியதால் புல்லை உண்ணாமல் நிற்கும் குதிரைகளை நினைத்தும் தலைவன் உறங்காது இருக்கிறான்.

தலைவனின் நினைவுகள் தலைவியை நினைத்தபடி வருந்தி இருப்பதனைப் புலவர் குதிரைகள் புல் உணவு உண்ணாமல் துயரப்படுவதன் மூலமாக விளக்கியுள்ளார். தலைவியைப் பிரிந்து போர்ப் பாசறையில் தங்கிருக்கும் தலைவன் தலைவியை நினைத்தப்படி வருந்தி இருப்பதையும் அதே நேரம் வீட்டில் தலைவி தலைவனின் நினைவுகளைச் சுமந்தபடி காத்திருப்பதனால் முல்லை நிலத்தினுடைய உரிப்பொருள் சுட்டிக் காட்டியிருப்பதனையும் அறிய முடிகின்றது.

இவன் தலைவி இவனை எண்ணி வருந்தி இருக்க தலைவனோ, அவளை நினையாது இருக்கிறான். இதனால் இவன் தலைவியிடம் அன்பில்லாதவன் எனத் தோன்றும். தன் படைகள் மீது காட்டும் அவனது

அருள் நெஞ்சம் 'ஆற்றியிரு' என்று தான் கூறியதை ஏற்றுப் பிரிவினைத் தாங்கி அறம்பேணுவாள் தலைவி என்ற எண்ணம் அவனுக்கு இருந்திருக்கிறது. வினையே ஆடவர்க்கு உயிரே என்ற அடிப்படையில் அவன் முழுமனதுடன் கடமையைச் செய்கிறான். முல்லை என்ற இல்லுறைக் கற்பின் விளக்கமாகத் தன் மனைவி திகழ்வாள் என்ற நம்பிக்கையே அவனுடைய வினையை வெற்றிகரமாக முடிக்க உதவியுள்ளது.

இங்ஙனம் தலைவன் இங்கிருக்க, மீண்டு வருவதாகக் குறித்து சென்ற கார்காலம் வந்தும் அவன் வாராமையால் வருந்துகிறாள் தலைவி. அவளது துயரைப் போக்க, பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு, உன் தலைவர் வினை முடிந்து இப்பொழுதே வருவார் என்று தேற்றியும் கூட மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிரே என்பதாக உள்ளாள். எனினும் இவ்விதம் வருந்துதல் தலைவன் சொல்லை மீறுவதாகும் எனக் கருதித் தன்னைத் தேற்றிக் கொள்கிறாள்.

"காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளைத் திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்தும்
ஏறறு மஞ்ஞையி னடுங்கி பிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுடர் ரழல
இடஞ்சிறந் துயரில் எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
முன்ப லிமிழிசை போர்ப்பனள் கிடந்தோள்"

வளையல்கள் நழுவாமல் திருத்திக் கொள்கிறாள். மீண்டும் மயங்குகிறாள். நெட்டுயிர்க்கின்றாள். அணிகலன்கள் நெகிழப் பெறுகின்றாள். பாவை விளக்குகள் எரிகின்ற அவளது ஏழடுக்கு மாளிகையின் கூடல் வாயிலில் மழைநீர் திரண்டு விழுகின்ற இனிய ஓசையில் தன் நெஞ்சைச் செலுத்தி அமைதியடைகிறாள். போர்மேற் சென்ற தலைவன் வெற்றி பெற்று துடிமுழங்க ஆரவாரத்துடன் முல்லை நிலப் பெருவழியிலே கார்காலத் தொடக்கத்தில் (ஆவணித் திங்கள் முதல் நாளில்) வருகிறான். அவ்வொலி தலைவியின் செவியில் சென்று சேர்கிறது. தலைவியும் தன் கடமையை அறத்தொடு நிறைவேற்றுகிறாள் என்று முல்லைப்பாட்டு, தலைவியின் வாழ்வியல் நெறியை வெளிப்படுத்துகின்றது.

முத்தொள்ளாயிரத்தில் அகம்புறம்

முனைவர். இ. காளீஸ்வரி,
கோவிந்தம்மாள் ஆதித்தனார்
மகளிர் கல்லூரி

முன்னுரை

சங்ககாலம் முதல் இக்காலம் வரை மக்கள் தங்களுடைய வாழ்வியல் முறையை அகம், புறம் எனப் பகுத்து வாழ்ந்து வருகின்றனர். இலக்கியங்களில் காதல் வாழ்வு எவ்வாறு சிறப்பித்துச் சொல்லப்படுகிறதோ அதே போன்று வீரமும், போரும் சித்திரிக்கப்படுகிறது. மூவேந்தர், மும்முரசு, முக்கொடி, முக்கொடை, முச்சங்கம் என்று மூன்று மூன்றாகச் சிறப்பிக்கப்படும் முத்தமிழின் சிறப்புக்குப் பொலிவூட்டும் சொற்சித்திரம் முத்தொள்ளாயிரம் என்னும் முத்தமிழ் காவியமாகும். மூவேந்தர்களின் நாடும் நலமும் போற்றி ஒவ்வொன்றும் தொள்ளாயிரம் பாடல்கள் என மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. இக்காரணம் பற்றியே இந்நூலுக்கு முத்தொள்ளாயிரம் என்ற பெயரிடப்பட்டது என்று கூறுவர். மூன்று தொள்ளாயிரம் முத்தொள்ளாயிரம் - 2700 பாடல்களில் இன்று புறத்திரட்டின் மூலம் 108 பாடல்களும், பழைய உரைகளிடையே பயின்று கிடந்த 22 பாடல்களும் ஆக 130 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இத்தகு முத்தொள்ளாயிரத்தில் அகம், புறம் பற்றிய செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகம்

மனத்தைச் சார்ந்தது அகம்; அல்லது அகம் என்பது மன உணர்ச்சியாகும். அது தூயது மட்டுமன்றி, மிகவும் நுண்ணியது. அகம் என்கிற காதல் உணர்வை ஒரு தலைவியிடமிருந்து அவ்வளவு எளிதில் மற்றவர் அறிந்து கொள்ள முடியாது. அத்தகைய நுண்மையானது காதல். அகம் அன்பான காதலுறவையும் அன்பான இல்லற வாழ்வையும் சொல்லிக் கொடுப்பது. இதனைத் தொல்காப்பியம்,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (தொல்காப்பியம் நூ.எ.947)

என்கிறது. கைக்கிளை, நடுவண் ஐந்திணை, பெருந்திணை. இந்த ஏழு திணையும் அகத்திணை என்று அழைக்கப்படுகிறது. திருவள்ளுவர் காமத்துப்பால் என்ற அகத்திணையைப் பாடினார்.

முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளை மரபு

முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளை பற்றிய செய்திகளே அதிகமாகக் காணப்படுகின்றன. கைக்கிளை பற்றி தொல்காப்பியம்,

"காமஞ்சாலா இளமையோள் வயின்
ஏமஞ்சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்று இரு திறத்தால்
தன்னொடும் அவனொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறா அன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே" (தொல்காப்பியம்.நூ.996)

எனக் குறிப்பிடுகிறது. ஆனால் அகப்பொருண்மை மரபில் மன்னனைக் கண்டு மயங்கும் பெண்ணின் உள்ளத்தைப் படைக்கும் முதல் மரபு இங்கேதான் கிளைவிடுகிறது. இவை பிற்காலத்தில் தோற்றம் பெற்ற உலா இலக்கிய வகையின் செழிப்பிற்குக் காரணமாக அமைந்தன.

பெயர் சுட்டா மரபு வீழ்ந்தது

அகப்பொருண்மையின் உயிர்ப் பண்பான பெயர் சுட்டா மரபு இங்கே தான் முதலில் வீழ்ந்தது. இலக்கியத்தில் தலைவனின் பெயரை மன்னன் என்ற பொதுப்பெயரோடு சேர, சோழ, பாண்டியர்களின் குலப்பெயரான கோதை, செம்பியன், மாறன் என்பதோடு கூறப்படுகின்ற புதுமையும் இங்குதான் அறிமுகப்படுத்தப்பட்டது. முத்தொள்ளாயிரத்தில் தலைவி தன்னுடைய காதலைத் தன் தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. தன் காதலைக் கூறும்போது தலைவனுடைய பெருமையைக் கூறி புறச் செய்திகளைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

உலா

பகை மன்னரை வென்று அரசன் வரும்போது ஊர் மக்களெல்லாம் வந்து அவனைப் பார்த்து மகிழ்ந்தனர். தொல்காப்பியம் பாடாண்திணையில்,

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" (தொல்காப்பியம் நூ.எ.1031)

என்று கூறியுள்ளது. கம்பர் இராமன் திருமணத்திற்கு முன்பு மிதிலை நகரில் உலா வருவதை,

"பேதைமார் முதல் கடைப் பேரிளம் பெண்கள் தாம்
ஏதியார் மாரவேள் ஏவவந் தெய்தினார்" எனவும்,
"தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழல்
கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்"
(கம்பராமாயணம், உலாவியல் - படலம், பா.எ.30)

என்று கூறுகிறார்.

வலைபடும் மீன் போல் வதைபடும் கண்கள்

ஒளிவிடும் இலைவடிவுடைய வேலேந்திய சோழ மன்னன் குதிரை மீதேறி வீதி வலம் வருகின்றான். வளையணிந்த பெண்கள் அவனைக் கண்டு துன்பத்தில் ஆழ்ந்தனர். அவனைப் பார்க்க வீடுகள் தோறும் இருந்த சன்னல் கதவுகளுக்குப் பின்னால் நீர் வலையில் சிக்கிய கெண்டை மீன்கள் பயந்து துள்ளுவதைப் போலப் பெண்களின் கண்கள் பார்க்கும்; தவிக்கும். இதனை,

"சுடர் - இலைவேல் சோழன் தன்
பாடலம் ஏறிப்
படர்ந்தான் பைந்தொடியார்
காணத் தொடர்புடைய
நீர் வலையில்
கயல்போலப் பிறழுமே
சாலே வாயில் தொறும்
கண்" (மு.தொ: ப.38)

என்கிறார் ஆசிரியர். இவ்வாறு உலா வரும் மன்னனைக் கண்டு பெண்களின் கண்கள் தவிக்கின்ற அழகை ஆசிரியர் கூறுகிறார்.

மகளிர்க் காதல்

சேரமன்னன் வீதி வலம் வருகிறான். அவனைக் காண மகளுக்கு ஆசை, எனவே கதவைத் திறக்க வருகிறாள். அவனை இவள் கண்டுவிடக் கூடாது என்று தாய் ஓடிவந்து தெருக்கதவை மூடுகிறாள். இதனை,

"தாயார் அடைப்ப
மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த
குடுமியவே - ஆய்மலர்
வண்டு உலா அம் கண்ணி
வயமான்தேர்க் கோதையைக்
கண்டு உலா அம் வீதிக்
கதவு" (மு.தொ: ப.11)

என்கிறார் ஆசிரியர். இங்கே தாயின் செயலையும் தலைவியின் செயலையும் கூறி, இவர்களுக்கு இடையே கதவானது தவியாய்த் தவிக்கிறது என்கிறார். சேர மன்னனைக் காண ஆவலாக உள்ளாள் தலைவி. ஆனால் அவள் மனம் வெட்கப்பட்டுக் கதவைத் திறக்காமலே திரும்பி விடும். இதனை,

"ஆய்மணிப் பைம்பூண்
அலங்கு தார்க் கோதையைக்
காணிய சென்று
கதவடைத்தேன் - நாணிப்
பெரும் செல்வர் இல்லத்து
நல்கூர்ந்தார் போல
வரும் செல்லும் பேரும் என்
நெஞ்சு" (மு.தொ: ப.18)

என்கிறார் ஆசிரியர். சேரனிடம் காதலைப் பிச்சையாகக் கேட்டுப் பெற நாணமுற்றத் தலைவியின் நெஞ்சை 'வரும் செல்லும் பேரும்' என்ற சொல்லாட்சி மூலம் படம்பிடித்துக் காட்டுகிறார்.

கதவருகில் வரும்
செல்லும் - திரும்பும்
பேரும் - மறுபடியும் திரும்பும்

இந்த மூன்று சொற்களும் தடுமாறும் பெண் மனத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தல்

பண்டைய அகமரபில் தலைவி தன்னுடைய உள்ள உணர்வுகளை வெளிப்படையாகத் தலைவனிடமோ பிற வாயில்களிடமோ வெளிப்படுத்துவதில்லை. ஆனால் முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளைத் தலைவி தன் உள்ளத்து உணர்வுகளைத் தோழியிடமும் இயற்கையிடமும், பிறர் முன்னிலையிலும் வெளியிடுவதாக அமைகிறது. இதனை,

"நீரும் நிழலும் போல்
நீண்ட அருளுடைய
ஊரிரே என்னை
உயக் கொண்மின் - போரிற்கு
உழலும் களியானைப்
பூழியர் கோக் கோதைக்கு
அழலும் என் நெஞ்சம்
கிடந்து" (மு.தொ: பக். 23-24)

என்கிறார் ஆசிரியர். தலைவி, சேரனிடம் தன் காதலைச் சொல்லித் தன்னைத் தடுத்தாட்கொள்ள ஊரில் உள்ள நல்லவர்கள் தயவை நாடுகிறாள். போர் போர் என்று ஓயாது போர் வெற்றிப் பெருமைகளையே

தேடி அலையும் சேரனிடம் போய், அவனையே எண்ணித்துடிக்கும் என் மனத்துயரை எடுத்துச் சொல்லி என்னுயிரைக் காப்பாற்றுங்கள் என்று கதறுகிறாள் தலைவி.

காதல் நோய்

தலைவி காதல் நோயினால் உடல் நலிகிறாள். இதனை உணராத தாயோ, தன் மகளுக்கு உள்ள நோய் தீர இறைவனை வழிபடுகிறாள். இதனை,

"காராட்டு உதிரம் தூஉய்
அன்னை களன் இழைத்து
நீராட்டி நீங்கு என்றால்
நீங்குமோ - போராட்டு
வென்று களம் கொண்ட
வெம்சின வேல் கோதைக்கு என்
நெஞ்சு களம் கொண்ட
நோய்" (மு.தொ; ப. 21)

என்கிறார் ஆசிரியர். வெள்ளாட்டு இரத்தத்தால் பல பூசை செய்து என்னை முழுக்காட்டிக் கொண்டு போய் கோவிலின் முன் நிறுத்தினால் தலைவியின் நோய் தீராது. தலைவி விரும்பியவனை அடைந்தால் மட்டுமே தீரக் கூடிய நோய் இது என்று அன்னைக்குத் தெரியவில்லையே என ஆதங்கப்படுகிறாள்.

தூது

பிரிவுத் துயர் தாங்காத தலைவி, தனிமையில் இருக்கும் போது, தான் பார்க்கின்ற ஒன்றைத் தூது அனுப்பியதாகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தூது என்ற சொல் தொல்காப்பியத்தில் உளது.

"ஓதல் பகையே தூது இவை பிரிவே" (தொல்காப்பியம்.நூ. 971)

தொல்காப்பியர் மூவகைப் பிரிவு பற்றி குறிப்பிடும் போது தூது செல்வதற்காகவும் பிரிந்து சென்றனர் என்கிறார். எனவே தூது அனுப்பும் வழக்கம் பண்டைய காலத்திலேயே வழக்கில் இருந்து வந்துள்ளதை அறிய முடிகிறது.

நாரையோடு நங்கை

காதல் வயப்பட்ட தலைவி, தன் காதலைத் தெரிவிக்க நாரையைத் தூதனுப்புகிறாள். இதனை,

"செங்கால் மடநாராய்!
தென் உறந்தை சேறியேல்
நின்கால்மேல் வைப்பன் என்
கை இரண்டும் - நன்பால்
கரை உறிஞ்சி மீன் பிறழும்
காவிரி நீர் நாடற்கு
உரையாயோ யான் உற்ற
நோய்" (மு.தொ:ப.8)

என்கிறார் கவி. நாரையே! மேற்குத் திசையில் இருக்கின்ற உறையூருக்கு நீ போய்ச் சேருவாயேயானால், சோழ மன்னனுக்கு அவன் மேல் நான் கொண்ட காதலைச் சொல்வாயாக என்கிறாள் தலைவி.

புறத்தின் மேன்மை

அகவாழ்விலும் புறவாழ்விலும் நேர்மையும் சீர்மையும் மிளிர வாழ்ந்தவர்கள் சங்ககால மாந்தர். அன்பின் அடிப்படையில் அமைவது அகவாழ்வு. அகத்திற்கு வெளியே அமைவது புற வாழ்வு. புறவாழ்வின் செம்மையும் செழுமையும் அகவாழ்வின் வளத்துக்கு வழிகண்டன. புறவாழ்வில் பல்வேறு செயல்கள் அமையும் என்றாலும் வீரமே பெரிதும் பேசப்படுவதைக் காணமுடிகிறது. பொருளீட்டல், தூது, கல்வி, காவல் போன்ற வேறு வேறு செயல்களில் சங்க கால மாந்தர் திறம்பட நின்றனர் என்றாலும் வீரம் செறிந்த போர் அவர்களின் மேன்மையினைக் காட்டுவதாக உள்ளது.

ஆட்சிச் சிறப்பு

சிறந்த ஆட்சி என்பது மக்கள் அனைவரையும் ஒன்றாகக் கருதி விருப்பு, வெறுப்பின்றி, சமநீதி வழங்கும் அறநெறியைப் பின்பற்றுவதே ஆகும். ஆட்சியின் சிறப்பினை,

"அள்ளல் பழனத்து
அரக்காம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்டது
என வெரீஇ - புள்ளினம் தம்
கைச்சிறகால் பார்ப்பெடுக்கும்
கவ்வை உடைத்தரோ
நச்சிலை வேல் கோக் கோதை
நாடு" (மு.தொ: ப.16)

என்கிறார் கவி. வயல் வெளிகளில் அறுவடை முடிந்த காலங்களில் செக்கச் சிவந்த ஆம்பல் பூக்கள் நிறையப் பூத்திருக்கின்றன. செவ்வாம்பல் மலர் விரிந்து மலர்ந்து வயல் எங்கும் தெரிவது, வயல் நெருப்புப் பற்றிக் கொண்டது போலத் தோற்றமளிக்கிறது. எனவே, அங்குள்ள நீர்ப் பறவைகள் பாதுகாப்பான இடங்களுக்கு தன் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு பறக்கின்றன. இப்படித் திடீரென்று பல பறவைகள் பறந்தோடுவதால் எழும் ஓசை உடையது சேர நாடு என்கிறார் ஆசிரியர். பறவைகள் பறந்தோடுவதால் எழும் ஓசையைத் தவிர வேறு எந்த ஓசையும் இல்லாமல் மிகவும் அமைதியாக உள்ளது. எனவே சேரனின் ஆட்சியில் மக்கள் நிம்மதியாகவும் இன்பமாகவும் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

போர்மாண்பு

மனித வாழ்க்கையில் போர் என்பது உயிரியல் தேவையாகவும், மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் இன்றியமையாத ஒரு கருவியாகவும் விளங்குகிறது. போர் என்பது நம் நாட்டிற்கு ஒன்றும் புதியதன்று,

"ஒருவனை யொருவ னடுதலுந் தொடுதலும்
புதுவதன்றிவ் வுலகத்தியற்கை" (புறம் 76 : 1-2)

என்று நம்பிய சமுதாயம் சங்ககாலச் சமுதாயம். பண்டைத்தமிழர் போரிலே ஓர் ஒழுங்கும், நேர்மையும் இருந்ததை அறிய முடிகின்றது. போரிடுவோர் மாற்றாரின் திறமும் தகுதியும் வீரமும் வலிமையும் அறிந்தே போரிட்டனர். கோழையுடனும், புறமுதுகு காட்டுவோனோடும், அச்சம் மிகுந்தவனுடனும் போரிட விரும்பமாட்டார். அத்தகையோருடன் போரிடுவது தம் வீரத்திற்கு இழுக்கு எனக் கருதினர்.

வீரமும் மரபும்

வீரத்தைப் போற்றுவது பண்டைத் தமிழர் மரபாகவே அமைந்துள்ளது. புலவர், அரசர், பெற்றோர் என்று எல்லோரும் வீரத்தை மதித்தும், போற்றியும் உள்ள பாங்கினை அறிய முடிகின்றது. கொடிய போர்க்களத்திலே பலர் இறந்துபட்டனர். அப்படி வீழ்ந்து கிடக்கின்ற வீரர்களின் விழிகள் திறந்திருக்கின்றன. புருவங்கள் வளைந்திருக்கின்றன. இதனைக் கண்டு நரிகள் பயந்து ஓடி வெகுதொலைவில் நிற்கின்றன. இதனை.

" வெருவரு வெஞ்சமத்து
வேல் இலங்க வீழ்ந்தார்
புருவ முரிவு கண்டு
அஞ்சி - நரி வெரீஇச்
சேட் கணித்தாய் நின்றழைக்கும்
செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார்
களம்" (மு.தொ: ப.124)

என்கிறார் கவி.போரிட்டு மடிந்தாலும் வீரர்கள் திறந்த விழி மூடுவதில்லை. அது வீரத்துக்கு இழுக்காகும். இதனைத் திருவள்ளுவர்,

"விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு" (குறள். 775)

என்கிறார். பகைவரைச் சினந்து நோக்கிய கண், அவர் வேலைக் கொண்டு எறிந்த போது மூடி இமைக்குமானாலும் அது வீரமுடையவர்க்குத் தோல்வியாகும். வீரத்தை மதிக்கும் மாண்புடையவர்களாகப் பண்டைத் தமிழர்கள் இருந்தனர். பாண்டிய மன்னன் போர்க்களத்திலே திகைத்துப் போய் நிற்கிறான். எதிரே வீரத்தோடும், கோபத்தோடும் வாயுதட்டைக் கடித்தபடி, கையிலே வேலைப் பிடித்தபடி கண்கள் நேராக வெறித்துப் பார்த்தபடி, தங்களுடைய யானைகள் மேலேயே கீழே விழாமல் இறந்து கிடக்கின்ற பகையரசர்களைப் பார்க்கிறான் பாண்டிய மன்னன். இதனை,

"கொடித் தலைத்தார் தென்னவன்
தேற்றான் போல் நின்றான்
மடித்த வாய் கட்டிய
கையால் - பிடித்த வேல்
கண் நேரா ஓச்சிக்
களிறு அணையாக் கண்படுத்த
மண் நேரா மன்னரைக்
கண்டு" (மு.தொ : ப. 129)

என்கிறார் ஆசிரியர். பாண்டிய மன்னனுக்கு இவர்கள் இறந்து பட்டவர்கள்தானா? இல்லை இன்னும் உயிரோடு இருக்கிறார்களா? என்று தடுமாற்றம் ஏற்படுகிறது. இதனைத் தான் தேற்றான் என்கிறார் ஆசிரியர்.

அரசும் படையும்

எந்த அரசாக இருந்தாலும், எந்தக் காலமாக இருந்தாலும் அவ்அரசு நன்றாக விளங்கப் படை இன்றியமையாதது. அதனால்தான் வள்ளுவர்,

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள் : 381)

என்கிறார். அரசனுக்கு உரிய ஆறு அடிப்படை அங்கங்களுள் முதலாவதாகப் படையைக் குறிப்பிட்டுள்ளார்.

பண்டைத்தமிழர் நாட்டைப் பாதுகாப்பதே தங்களின் கடமை எனக் கருதினர். அதனால் அவர்கள் நான்கு வகையான படைகளை வைத்திருந்தனர் என்பதைப் புறநானூறு,

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல் மறவரும்"
(புறம் : 55 : 7-8)

எனக் குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் படை எத்தகைய ஆற்றல் படைத்ததாக விளங்கிற்று என்பதை

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும்
ஆற்றலதுவே படை" (குறள். 765)

என்ற குறளின் மூலம் அறியலாம். யானையின் வீரத்தைப் பற்றி முத்தொள்ளாயிரம்,

"வீறுசால் மன்னர்
விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த
பரிசயத்தால் - தேறாது
செங்கண் மாக்கோதை
சினவெம் களியானை
திங்கள்மேல் நீட்டும்தன்
கை" (மு.தொ : ப.எ. 29)

எனக் குறிப்பிடுகின்றது. சேரனுடைய பட்டத்து யானை பகையரசர்களின் வெண்கொற்றக் குடையைப் பிடுங்கி எறிந்து நொறுக்கியது. அப்படியும் அதன் வேகம் தணியவில்லை. சினமிக்க அந்த யானை வானில் தெரியும் முழுமதியையும், வேற்றரசன் ஒருவனுடைய வெண்கொற்றக் குடை என்று எண்ணி, அதையும் பிடுங்கி எறியத் தன் துதிக்கையை நீட்டுகிறது.

பாண்டியனின் யானைகள் தந்தங்களால் பகைமன்னர்கள் மார்பில் குத்தி வீழ்த்துகின்றன. இதனை,

"மருப்பு ஊசி ஆக
மறம் கனல் வேல் மன்னர்

உருத்தகு மார்பு ஓலை
ஆகத் - திருத்தக்க
வையகம் எல்லாம்
எமதன்று எழுதுமே
மொய் இலை வேல் மாறன்
களிறு" (மு.தொ ; ப. 120)

என்கிறது. மன்னர் மார்பில் யானைத் தந்தங்கள் தைப்பதை, யானைகள் தந்தங்களாகிய எழுத்தாணி கொண்டு, பகைமன்னர் மார்பாகிய ஓலையில் - ஏட்டில், இந்த உலகமெல்லாம் எமக்குரிமை என்று எழுதிக் காட்டுகின்றன என்கிறது முத்தொள்ளாயிரம்.

போரின் கொடுமை

போர்க்களத்திலே வீரர்களும், மன்னர்களும் வீழ்ந்து கிடக்கின்றார்கள். செங்குருதியானது வழிந்து ஓடுகிறது. சேரனுடன் போரிட்டு மடிந்த மன்னர்களின் தோள் அணிகள் கீழே கிடக்கின்றன. வயிரத்தாலான கங்கணங்களை அணிந்த கைகள் வெட்டுண்டு வீழ்ந்து கிடக்கின்றன. இதனை முத்தொள்ளாயிரம்,

"மரகதப் பூண் மன்னவர்
தோள் வளை கீழா
வயிரக் கடகக்கை
வாங்கித் - துயர் உழந்து" (மு.தொ ; ப. 31)

எனக் குறிப்பிடுகிறது. இப்படிப்பட்ட துயரக்காட்சிகள் நிறைந்ததுதான், சேரனுடன் போரிட்டுத் தோற்ற மன்னர்கள் வீழ்ந்து கிடக்கின்ற போர்க்களம்.

பேய்கள் போர்க்களத்திலே இறந்த உடல்களின் உறுப்புக்களை எடுத்துக் கொண்டுபோய் விளக்கேற்றி மகிழ்கின்றன. இதனை,

"முடித்தலை வெள் ஓட்டு
மூளை நெய் ஆகத்
தரித்த குடல் திரியா
மாட்டி - எடுத்தெடுத்துப்
போய் விளக்கயரும்
பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத
களம்" (மு.தொ ; பக். 65-66)

என்கிறது முத்தொள்ளாயிரம். இவ்வாறு சோழ மன்னன் போரிட்டு வென்ற போர்க்களம் காட்சியளிக்கிறது. இதனைக் கலிங்கத்துப் பரணியில்,

"கல்லைக் கறித்து பல் முறித்து
கவிழ்ந்து விழ்ந்த கலிங்கர்தம்
பல்லைத் தரித்துப் பழஅரிசி ஆகப்பண்ணி" (கலிங்கத்துப்பரணி பா 525)

எனக் குறிப்பிடுகிறது. போர்க்களத்திலே உடல் உறுப்புகள் சிதறிக் கிடக்கின்றன. அங்கே பேய்கள் தங்களுக்கு வேண்டிய உணவைத் தயார் செய்கின்றன. மேலும் தலைமுடியோடு கூடிய, வெண்மையான மண்டை ஓட்டை அகலாகவும், அதன் உள்ளிருக்கும் மூளை அகலில் விடும் நெய்யாகவும், துண்டுபட்ட குடல்களை விளக்கிலிடும் திரியாகவும் ஒவ்வோர் உடலாக எடுத்துக் கொண்டுபோய் பேய்கள் விளக்கேற்றி மகிழும் தன்மை உடையதாகப் போர்க்களம் இருந்தது என்கிறார் ஆசிரியர்.

வீரத்திலும் உயிரிரக்கப் பண்பு

பண்டைத் தமிழ் வேந்தரின் போர் வலிந்து மண்ணாசை கொண்டு நடைபெற்றதாகத் தெரியவில்லை. அறம் பிறழ்ந்த போதும், அயலாரின் அச்சுறுத்தலின் போதுமே நடைபெற்றது என்பதை உணர முடிகிறது. போரில் கருணைக்கு இடமில்லை என்றாலும், அறம் சிதைந்து விடவில்லை. போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் மனைவியர் தீக்குளித்து உயிர் விடுவதைக் கண்டு மனம் பொறுக்காத பாண்டியன் தன் மேலாடையால் கண்களை மறைத்துக் கொண்டான். இதனை முத்தொள்ளாயிரம்,

"ஏனைய பெண்டிர்
எரிமூழ்கக் கண்டுதன்
தானையால் கண்புதைத்தான்
தார்வழுதி - யானைஎலாம்
புல்லார் பிடிபுலம்பத்
தாம்கண் புதைத்தனவே
பல்வாயால் பட்ட
களத்து" (மு.தொ: ப.125)

எனக் குறிப்பிடுகிறது. பகைவர் துயர் கண்டு பாண்டியன் வருந்தியதோடு நில்லாமல் அவன் யானைகளும் வருந்தின என்கிறார். எனவே வெல்வதும் கொல்வதும் மட்டுமல்ல வீரம், மற்றவர் துன்பங்கண்டு வருந்துவதும் வீரம் ஆகும்.

போராற்றல் மிக்க பாண்டியன், பகைமன்னர் கோட்டை மதிலை வென்றாலும், அதன் உள்ளிருக்கும் மகளிர் கூட்டத்தைத் தீண்டமாட்டான் என்பதை,

“இருங்களிறு ஒன்று
மடப்பிடி சாரல்
இலங்கு அருவி நீரால்
தெளிக்கும் – நலம் கிளர்வேல்
துன் அரும் போர்க்கோதை
தொடாஅன் செருக்கின்
மன்னவர் மதில் ஆயம்
வென்று” (மு.தொ: ப.131)

எனக் குறிப்பிடுகிறது. பகைமன்னர்களின் பெண்களைக் கவர்தல், அவர்களுக்குத் தீங்கிழைத்தல் தமிழர் பண்பல்ல என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

முடிவுரை

தமிழர்தம் வாழ்க்கை முறைகள் அகம், புறம் என்றவாறு வாழ்வியல் ஒழுங்கமைவாய் வகுக்கப் பெற்றுள்ளன. முத்தொள்ளாயிரத்தில் காணப்படும் தலைவி உலாவரும் மன்னனைக் கண்டு காதல் கொள்கிறாள். இவ்வகையில் முத்தொள்ளாயிரத்தில் அகக் கருத்துக்கள் அமைகின்றது. மேலும் கைக்கிளை அகமரபைக் கூறுவதிலிருந்து சிறிது மாறுபட்டு புறமரபைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. தலைவனுடைய புகழையும் படைச்சிறப்பையும் வீரத்தையும் கூறுவதிலிருந்து முத்தொள்ளாயிரம் புறமாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு முத்தொள்ளாயிரத்தில் அகமரபும், புறமரபும் பின்பற்றப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

வாசகர் வாசகம் (1)

குறுந்தொகையில் தோழியரின் பாலினப் பண்பும்
கொற்றவனாம் திருமலையார் உரப்பன் ஊரின்
பெரும்புகழ்சேர் செப்பேட்டின் செய்தி; மற்றும்
பீடுறுநம் பாவேந்தர் இளையோர் பற்றித்
தரும்இலக்கி யச்சிறப்பும் காப்பியத்தின்
தகைசான்ற மணிமேக லையாள் சாற்றும்
அரும்சமயப் பொறைசொல்வி புறநானூறும்
ஆய்ந்தளித்த செந்தமிழாம் இதழைப் போற்று!

அன்புள்ள, பாவலர், **அறிவரசன்**, திருலோக்கி

திருக்குறளும் நான்மணிக்கடிகையும் – கண்கள்

பா. இளவரசி
முனைவர் பட்ட பகுதிநேர ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முன்னுரை

மண்ணுலகில் பிறந்த மனிதனின் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எண் வகை மெய்ப்பாடுகளையும், தான் உணர்வதற்கும் பிறருக்கு உணர்த்துவதற்கும் மூல ஆதாரமாய் இருப்பது கண்களே. இதனை,

புருவக் கொடியருகே
பொன்னிமையின் உள்ளே
உருவாகிச் சுழலும்
உள்ளத்தின் முத்திரைகள்

என்று கவிஞர் ந. காமராசன் நவில்வார். ('எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம், அந்த சிரசிற்கும் கண்ணே பிரதானம்' என்பது ஆன்றோர் வாக்கு) தாயின் உதரத்தில் குழந்தை உருவாகும் போது கருவில் தோன்றும் முதல் உறுப்பு கண் என்னும் அறிவியல் கூற்றிலிருந்து அதன் முதன்மையை அறியலாம். 'கண்ணளக்காதது கையளக்க இயலாது' என்பது பழமொழி. சான்றாக அன்னை சோற்றில் உப்பிடும் போது கண்ணால் அளப்பதைக் கொள்ளலாம். நிலவுலகில் காணுகின்ற பொருளையெல்லாம் கண்டறியும் கண், தான் இருக்கின்ற முகத்தைத் தானே காண இயலாது. அதற்குத்தன் இருப்பிடத்தைக் காண கண்ணாடி வேண்டும். தானத்திலே சிறந்தது கோதானம் (பசுதானம்), பூதானம் (நிலதானம்) என்றது அன்று. தானத்திலே சிறந்தது கண்தானமே இன்று. இத்தகைய கண்களின் மேன்மையைத் திருக்குறளும் நான்மணிக்-கடிகையும் காணும் விதத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறிவே கண்கள்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று ஔவையார் ஆத்திசூடியில் ஓதுவர். இக்கருத்தைத் திருவள்ளுவரும்,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு' (குறள். 392)

என்று கூறுவர்.

'எண்ணென்று சொல்வனவும் மற்றை எழுத்து என்று சொல்வனவும் ஆகிய இவ்விரண்டும் மக்களுக்குக் கண் என்று சொல்லுவோர் அறிவுடையோர்" என்று புலவர் குழந்தை பொருளுரைப்பர்.

உடலுறுப்பாகிய கண்கள் எண், எழுத்து ஆகியவற்றை அறியாவிட்டால் ஊனக்கண்களே. அதாவது அவை இருந்தும் பயனில்லை என்று புலப்படுத்தப்படுகிறது. கல்லாதவர் கண்கள் புண்களுக்குச் சமம் என்று கீழ்வரும் குறளில் விளக்குவர்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்". (குறள். 393)

"கண்ணுடையர் என்று உயர்த்துச் சொல்லப்படுபவர் கற்றவரே. கல்லாதார் முகத்தில் இரண்டு புண்களை உடையவராவார்.

அயல்நாட்டைப் பற்றியும் பழங்காலத்தைப் பற்றியும் அறியும் அறிவுக் கண்ணுடைமையான கற்றாரைக் கண்ணுடையார் என்றும் நோய்வருதல், பீளை தோன்றுதல் முதலிய துன்பஞ் செய்யும் ஊனக் கண்ணே உடைமையின் கல்லாரை முகத்திரண்டு "புண்ணுடையார்" என்றும் உரையாசிரியர் புலவர் குழந்தை கூறினார்.

விளம்பி நாகனார் இக்கருத்தை நான்மணிக்கடிகையில்,

"புகழ் செய்யும் பொய்யா விளக்கம் - இகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை - காணாக்
குருடனாச் செய்வது மம்மா - இருள் தீர்ந்த
கண்ணாரச் செய்வது கற்பு". (நான்மணிக்கடிகை : 24)

என்றும் விளம்புவர். இதற்கு உரையாசிரியர் பாலசுந்தரம் பிள்ளையவர்கள்,

"பொய்யாமையாகிய ஒளி எங்கும் புகழை உண்டாக்கும். அறியாமை முறை கடந்து ஒருவரையும் மதியாமல் தீமை செய்வதாம். கற்றறிவில்லா மயக்கம் வழிகாணாக் குருடனாகச் செய்வதாம். கல்வியறிவு இருள் நீக்கிய கண்ணொளி உடையராகச் செய்வதாம்" என்றுரைப்பர்.

திருவள்ளுவர் எண், எழுத்து முதலிய கல்வியறிவைப் பெறாதவர்கள் முகத்தில் உள்ளவை கண்களல்ல. இருபுண்களே என இடித்துரைப்பர். விளம்பிநாகனார் கல்வியறிவு இல்லாதவர் முகத்தில் கண்கள் இருப்பினும் வழிகாணாத குருடர்களே: கல்வியறிவு பெற்றவரே கண்ணொளி பெற்றவராவர் என்று அறிவுறுத்துவர். இக்கருத்துக்களின் வழி இருவருமே கல்வி அறிவே கண்கள் என அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

கண்ணோட்டமே கண்கள்

"தன் உறவினரும் நண்பரும் தன்னொடு பழகியவரும் தன்னொடு தொடர்புடையவரும் தனக்கு உதவினவரும் எளியவரும் ஆனவருக்கு நன்மை செய்வதை மறுக்க முடியாத அன்பு. இது அவரைக் கண்டவுடன் அவர் மீது மனம் விரைந்தோடுவது பற்றிக் கண்ணோட்டம் எனப்பட்டது" என்பது தேவநேயப் பாவாணரின் விளக்கம்.

விளம்பி நாகனார் கண்ணோடார் தன்மையையும் கண்ணோட்டத்தின் பயனையும் கண்ணோட்டமின்றி நடுவுநிலையுடன் ஆளும் முறைமையையும் மூன்று பாடல்களில் விளக்குவர்.

கண்ணோடாதார் தன்மை

"கல்வியறிவுடையவர்களை விரும்பி உடனிருப்பவர்கள். அக்கல்வி அறிவுடையவர்களுக்கு ஒப்பாவார்; கண்ணோட்டமில்லாதவர்கள் இடர் செய்வாரை ஒப்பர்; உண்மையைத் தெளிவாகச் சொல்லாதவர்கள் பகைவருக்கு நிகராவர்; சிற்றறிவுடையார் பாம்புப் புற்றுக்கு ஒப்பாவர்" என்னும் கருத்தில்,

கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னா செற்றாரைச் சேர்ந்தவர் - தெற்றென
உற்ற துரையார் உள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறவி னார்" (நான்மணி. 58)

என்று பாடுவார்.

கண்ணோட்டத்தின் பயன்

வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்
இன்கண் பெருகின் இனம் பெருகும் - சீர்சான்ற
மென்கண் பெருகின் அறம் பெருகும் வன்கட்
கயம்பெருகின் பாவம் பெரிது (நான்மணி)

என்னும் பாடலில் பால்போலும் இனிய சொல்லையுடைய மனைவியர்பால் இனிய கண்ணோட்டம் பெருகுமானால் சுற்றத்தார் பெருகுவர் என்று கண்ணோட்டத்தின் பயனைக் குறிப்பிடுவர்.

கண்ணோட்டமின்மை - ஒருதலைச் சார்பின்மை

"நல்லொழுக்கம் என்பது கல்வியறிவின் பயனாகும். இன்ப நுகர்ச்சி, பொருளாட்சி செல்வத்தைக் கையாளுதலின் பயனாகும். யாரிடத்திலும் கண்ணோட்டம் இல்லாமை நடுவுநிலைமையாக ஆளும் முறைமையாம் பிறரோடு ஆராய்ந்து அரசாளுபவன் தன்னுள்ளத்தில் ஆராயாமையும் இல்லை" என்னும் கருத்தில்,

"ஆசாரம் என்பது கல்வி அறஞ்சேர்த்து
போகம் உடைமை பொருளாட்சி யார்கண்ணும்
கண்ணோட்டம் இன்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணாட்டம் இன்மையும் இல்" (நான்மணி: 96)

இதே கண்ணோடாது ஆளும் முறைமையைத் திருவள்ளுவரும்.

"ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை" (குறள். 541)

இவ்வாறாக, கண்ணோட்டம் இல்லாத கண்களின் வெற்றுத் தன்மையை வள்ளுவர் ஐந்து குறட்பாக்களில் அடுக்குவார். அவை பின்வருமாறு :

"பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்" (குறள் 573)

"உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்" (குறள். 574)

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃது இன்றேல்
புண்ணென்று உணரப் படும்" (குறள். 575)

"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர்". (குறள். 576)

"கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்" (குறள். 577)

இக்குறட்பாக்களின் வழி பாட்டோடு பொருந்தாத இசையால் பயனில்லை: அதுபோல கண்ணோட்டம் இல்லாத கண்ணால் பயனில்லை; அவை முகத்தில் உள்ளன போல் தோற்றமளிக்கும் தன்மையன; அவர்கள் மண்ணோடியைந்த மரத்திற்கு ஒப்பாவார்; அவர்கள் குருடர்களே என்ற கருத்துக்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

இருவரின் கருத்துக்களையும் ஆராயுமிடத்து கண்ணோட்டம் இருவகைப்படும். ஒன்று அன்போடியைந்த இரக்கம்; மற்றொன்று ஒருதலைச் சார்பு. ஆக இது எத்தனை வகைப்பட்டாலும் கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணில்லாதவர் என்று உரைப்பதிலிருந்து கண்ணோட்டமே கண்கள் என உறுதிப்படுத்துகின்றார்.

காட்சியே கண்கள்

கண்களின் வழியே காட்சி பிறக்கும்; காட்சிகளின் வழியே கண்கள்

செல்லும் என்பது உலக வழக்கு. ஆனால் காட்சிக்கான பொருள்கள் செய்யப்படுவது கண்களின் உள்வாங்கிய உணர்வுகளின் வெளிப்பாடே. ஆதலால் காட்சியே கண்களாயிற்று. இயற்கைக் காட்சி இதற்கு விதிவிலக்கு.

காட்சியாகக் கண்கள் அமைகின்ற முறையை விளம்பி நாயனார் பின்வரும் பாடலில் விளக்குகிறார்.

"மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள் மாலிருள்
நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர் - பெய்யல்
முழங்கத் தளிர்க்கும் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமாம் மேல்" (நான்மணி பாடல் : 38)

இங்கு குவளை மலரைப் போன்ற கண்கள் மையினால் எடுத்துக் காட்டும் காட்சி தெரிவிக்கப்படுகிறது. அடுத்து அழகான காட்சிப் பொருள்களைப் பார்த்தறிகின்ற நோக்கின் மூலம் கண்களின் மேன்மை உணரப்படும் என்னும் கருத்தினைக் கீழ்க்காணும் பாடல் பகர்கின்றது.

"நாக்கினறிப இனியதை - மூக்கினால்
மோந்தறிய வெல்லா மலர்களும் நோக்குள்ளும்
கண்ணினால் காண்ப அணியவற்றைத் தொக்கிருந்து
எண்ணினாள் என்னப்படும்" (நான்மணி : பாடல் 78)

நாவாற் சுவைத்தறிவார்கள் எல்லா மலர்களையும் மூக்கினால் மோந்து அறிவார்கள். காட்சிக்கு அழகான பொருள்களைப் பார்வை உண்டென்று கருதப்படும் கண்ணினாற் பார்ப்பார்கள் அறிஞர்கள் உருவிலிருந்து அறிவினால் உணர்ச்சிகள் ஆராயப்படும். இதில் கண்கள் காட்சியின் வழி உணரப்படுகின்றன. கோழி தன் வயிற்றில் முட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதாக எண்ணியதாம். அந்த முட்டை தனக்குள் ஒரு கோழியைப் பாதுகாப்பாக வைத்திருப்பதாக எண்ணியதாம். இது போன்றதே **காட்சியே கண்கள்** எனும் கூற்று.

உணர்ச்சியே கண்கள்

திருக்குறளின் காமத்துப்பாலில் தலைவன், தலைவி ஆகியோரின் உணர்ச்சிகளே கண்களாயக் காட்சியளிப்பதைக் காணமுடிகிறது. தலைவனுக்குத் தன் தலைவியின் கண்கள் உயிரை உண்ணக்கூடிய கூற்றுவனாகவும், மருண்டு நோக்கும் தன்மையால் பிணைமான் போன்றும் சில நேரங்களில் மாந்தக் கண்ணாகவும் பலவகைகளில் காட்சியளிக்கின்றன. ஒருவேளை அருகில் வளைந்திருக்கும் புருவங்கள் நேராக நின்று மறைக்குமானால் கண்டவுடன் அவனை நடுங்கச் செய்யும் துன்பம் அவனுக்கு அளிக்காதோ என்று தன் உணர்ச்சிகளைப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறான்.

"கண்டார் உயிருண்ணும் தோற்றத்தான் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண்" (குறள். 1084)

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம் மூன்றும் உடைத்து" (குறள். 1085)

"கொடும்புருவம் கோடா மறையின் நடுங்கஞர்
செய்யல் மன்இவள் கண்" (குறள். 1086)

இது மட்டுமின்றித் தலைவன், "என் கண்ணின் கருமணி கண்ணின் தங்கும் பாவையே! நீ அவ்விடத்தை விட்டுப் போவாயாக. ஏனெனில் எம்மால் விரும்பப்படும் அழகிய நெற்றியை உடையாட்கு இருக்க வேறிடமில்லை" என்று கூறுவதாக,

"கருமணியிற் பாவாய்நீ போதாய் யாம்வீழும்
திருநுதற்கு இல்லை இடம்" (குறள். 1123)

உணர்வில் தலைவி தலைவனைக் காட்டிலும் முன்னேறியவள். தம் காதலர் ஒருபோதும் தம் கண்ணகத்து நின்றும் நீங்காதவர்; அதை மறந்து ஒருகால் அவள் இமைத்த போதாயினும் அதனால் வருத்தமுறார்; அவர் எப்பொழுதும் தன் கண்ணுள் இருப்பதால், அவர் மறைவாரென்று தன் கண்களுக்கு மையிடுதல் இல்லை; இது தவிர சிறிது நேரம் இமைப்பதும் இல்லை என்று புலம்புகின்ற நிலைக்கு அவளை இட்டுச் சென்ற உணர்ச்சிக் கண்களைப் பின்வருமாறு திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

"கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்" (குறள். 1126)

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து" (குறள். 1127)

"இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்" (குறள். 1129)

இவ்வாறெல்லாம் புலம்பியும் கண்கள் கேட்காமல் தலைவனைக் காட்டும்படி தலைவிக்குத் தொல்லை கொடுப்பதாகவும், அதனைத் தவிர்க்கத் தன் நெஞ்சிடம் அவள், தலைவனோடு செல்கின்ற போது கண்களையும் அழைத்துச் சென்றுவிடு; ஏனெனில் அவை தலைவனைக் காணவேண்டும் என்று தன்னைப் பிய்த்துத் தின்னுகின்றன என்று கூறுவதை,

"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவை என்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று" (குறள். 1244)

என்னும் குறளால் அறியமுடிகிறது. உணர்வுகளில் இரண்டறக் கலந்த இருவரின் கண்களும் ஒன்றையொன்று நோக்கும்போது வாய்ச்சொற்கள் பயனற்றுப் போகும் என்பதை,

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல" (குறள். 1100)

என்கிறார்.

கம்பர் காட்டும் உணர்ச்சிக் கண்கள்

கம்பராமாயணத்தின் மிதிலை நகரில் ரதத்தில் ஏறி இராமன் உலா வருவதைக் காண மங்கையர் மழையுற்று வறண்டு கிடக்கும் நாளில் நீரினைக் கண்ட மான் கூட்டம் ஓடியது போல் ஓடிய காட்சியை வருணிக்கும் கம்பர், அப்பெண்கள் காணமுடியாத காதலையே கண்ணினால் கண்டதாகக் கூறுவர். இக்கூற்று உணர்ச்சியே கண்கள் என்பதை நிறுவுகிறது.

"கண்ணினால் காதல் என்னும் பொருளையே காண்கிறோம்இப்
பெண்ணின் நீர்மையினால் எய்தும் பயன் இன்று பெறுதும் என்பார்
மண்ணில் நீர் உலர்ந்து வானம் மழை அற வறந்த காலத்து
உண்ணும் நீர் கண்டு வீழும் உழைக் குலம் பலவும் ஒத்தார்"

(கம்.ராமா. படலம்: உலாவியற் பாடல் 216) (20)

மருட்சியே கண்கள்

தலைவனைக் காணாதபோது அவன் தவறுகளை எல்லாம் நினைத்துக் கொண்டிருக்கும் நெஞ்சம் அவனைக் கண்டபோது அனைத்தையும் மறந்து அவனை மட்டுமே காண்பதாய் உள்ளது. இது மையிடும்போது கோலினைக் காணாத கண்ணுக்கு இணையாகும். அவை கீழ்க்காணும் குறட்பாக்களில் காணப்படுகின்றன.

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கண்
பழிகாணேன் கண்ட இடத்து" (குறள். 1285)

"காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை" (குறள். 1286)

மானினைப் போன்று மருண்டு நோக்கும் கண்களை உடைய தலைவி, தன் தலைவனைக் கண்டவுடன் மருளுவதால் இங்கு மருட்சியே கண்களாயின.

முடிவுரை

விண்ணிலிருந்து பொழியும் மழைத்துளி மண்ணில் விழுகின்ற போது அதன் வளத்தைப் பொறுத்து அருவியாக, ஆறாக, குளமாக, கண்மாயாக, கால்வாயாக, கடலாக மாறுவது போன்று விண்ணில் ஒளிரும் கதிரவனின் ஒளித்துளி கண்ணில் விழுகின்ற போது அதன் உளத்தைப் பொறுத்து கல்வி அறிவாக, கண்ணோட்டமாக, காட்சியாக மாறுகின்ற நிலையை உயிர்களுக்கு உணர்த்துவதில் வள்ளுவரும் விளம்பி நாயனாரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பது இக்கட்டுரையின் வழி பெறப்படுகிறது.

ஆனால் வள்ளுவர் உணர்ச்சி, மருட்சி முதலியவற்றைத் தன் சுழற்சியால் வெளிப்படுத்தும் கண்களை விரித்துரைக்க, விளம்பி நாயனார் காமத்துப்பாலில் கண்கள் பற்றி எழுதாததால் அவ்விரண்டும் பற்றித் தம் பாடல்களில் குறிப்பிடவில்லை என்பது நோக்கற்குரியது.

மண்ணிலே தோன்றி மண்ணிலே மடியும் மனிதன் பிறக்கும் போது கடவுள் கண்ணைத் திறந்து விட்டதால் (அருளினால்) உதித்தான் என்றும் அவன் மறைந்த போது கண்ணை மூடிவிட்டுப் போய்விட்டான் என்றும் புகலப்படுகிறது. இதிலிருந்து பிறப்பும் இறப்பும் கண்ணினுள் அடங்கும் என்பது கண்கூடு.

❖ ❖ ❖

வாசகர் வாசகம் ②

அன்புள்ள 'செந்தமிழ்' ஆசிரியர் அய்யா அவர்களுக்கு வணக்கம்.

தொல்காப்பியர் ஆடவர், பெண்டிர்க்கான குணங்களைப் பகுத்து ஆண்மைக்குணங்கள், பெண்மைக்குணங்கள் என்று காட்டியுள்ளார். அதனுள் தலைவி, தோழியரின் பாலினப் பண்புகள் பற்றி குறுந்தொகைப் பாடல்களை முன்னிறுத்தி மீனாட்சி மிகச்சிறப்பாய் விரித்துரைத்துள்ளார். பெண்டிர்க்குக் கூறப்பட்டுள்ள அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை இக்காலத்திற்குப் பொருந்துகிறதா? என்பது சிந்தனைக்குரியது.

உரப்பனூர்ச் செப்பேட்டுச் செய்திகள் திருமலைநாயக்கர் காலத்து நிகழ்ந்த பல உண்மைகளைப் பளிச்சிட வைக்கின்றன. அவர் கொடுத்த கொடைகளுக்கு நிலமானால் நான்கெல்லைகளும் சாட்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. காராம்பசுவையும் பிராமணர்களையும் கொல்வது பாவங்களாகக் கருதப்பட்டன.

இளைஞர் இலக்கிய யாகப்பா வேந்தர் படைத்துள்ள படைப்புக்களில் சீருந்த செந்தமிழ், இயற்கைஎழில், அறிவுரைத்தல், ஊர்திகள், விலங்குகள், பறவைகள் பற்றிய பாடல்கள் தரப்பட்டு சிறுவர்களைத் தாலாட்டுப் பாடி துயில் எழுப்பவும் செய்கிறார். அவற்றைத் தொகுத்து முனைவர் சொக்கலிங்கம் சிறப்புற வழங்கியுள்ளார். புறநானூற்றில் முரசின் செயல்பாடும், பயன்பாடும் சிறப்பும் பல பாடல் புனைவுகளில் இடம் பெற்றுள்ளதை வீரப்பன் திறம்பட விளக்கியுள்ளார்.

அன்புள்ள, புலவர். **ந. ஞானசேகரன்,** திருலோக்கி.

கற்பனையின் உச்சம்

புலவர் **தா.குருசாமி தேசிகர்,** தருமபுர ஆதீனம்

சிவப்பிரகாசர் செந்தமிழில் கற்பனையும், உவமைகளும், உருவகங்களும் உலவுவதால், "கற்பனைக் களஞ்சியம்" எனப் புகழ் பெற்றார். அவரது நூல்களில் "பிரபுலிங்கலீலை" சிற்றிலக்கியம் என்றாலும், அவர் படைத்த பாத்திரப் படைப்புகளில், கற்பனையும் கவிநயமும் உச்சமாக நிலவுகின்றன.

'மாயை' சிவப்பிரகாசர் படைத்த மாபெரும் அழகி! 'மாயை' பிறந்தபின், அவளை வளர்த்த விதம் கூறும் கவியழகு, உவமையால் உச்சம் பெறுகிறது. வறியவன் ஒருவன்: அவனுக்கு இருப்பது ஒரே ஒரு நன்செய் நிலம்; அதில் அவன் பயிர் செய்தால், உரிய காலத்தில், காவல் காத்து பயிரைக் காத்துக் பயன் பெறுவான். அதுபோலவும், கல்வியில் விருப்பமுடையவன் தவறாது, நாள்தோறும் படித்து மறவாமல் கல்வி கற்பது போலவும், அரசன் குடிமக்களைச் செங்கோல் முறையில் உடல் உயிராக இருந்து காப்பது போலவும், மாயையை, அவள்தாய் போற்றி வளர்த்தாள் என்று கூறுங் கவிதையில் உவமைகள் நீதியைப் புகட்டுகின்றன.

மிடியன் ஒரு செய்யாளனச் செய்
　　விளையக் காக்கும் செயல் போலப்
படியில் கல்வி விரும்பினோன்
　　பாடம் போற்றும் அதுபோல
ஒழிவில் செங்கோல் மனுவேந்தன்
　　உலகம் புரக்கும் முறைபோலக்
கொடிய நோன்பு செய்தீன்ற
　　கொடியை வளர்த்தாள் மோகினியே.

என்ற பாடலில், வறியவன் நிலத்தை எப்படிப் பேணவேண்டும் என்றும், கற்கும் மாணவன் பாடத்தை எப்படி போற்றவேண்டும் என்றும். அரசன் எவ்வாறு நாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்றும் விளக்கிய "மேம்பாடு" உவமை வாயிலாக உச்சம் பெறுகிறது. மோகினி மாயையின் தாய்!

திருவள்ளுவரின் திருக்குறளைப் பல கவிஞர்கள் கையாண்டி-ருந்தாலும், இவர் கவிதையில், இரண்டு குறள்கள் விளக்கம் பெறுகின்றன. மற்றொரு குறளும் மறைந்து வருகிறது. மாயையின் குழந்தைப் பருவக் காட்சியில் "குழலினிது யாழினிது" என்ற குறளும் 'சிறுகையளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற இனிதே' என்ற குறளும் இலக்கியமாக, கவிஞர் அருளுகிறார்.

'குழலும் யாழும் இனியவெனக்
　　கூறா வண்மை மென்கனிவாய்
மழலை மொழிந்தும் உடற்கின்பம்
　　மருவ ஓடி மேல்விழுந்தும்

விழையும் அமிழ்தின் மிக இனிமை
விளைய நுகரும் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும்
செய்தாள் மோகம் ஈன்றாரை' -

என்ற கவிதையில் 'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்' என்ற குறளும், கவிஞர் வாக்கில், 'உடற்கின்பம் மருவ ஓடி மேல் விழுந்தும்' என்று பதிவு பெறுகிறது. மாயைக்குப் பல்வகை அணிகள் அணிந்து அழகுக்கு அழகு செய்த திறத்தை, கவிஞர் வருணிக்கும் திறம் மகிழ்வைத் தரும். மாயையின் மூக்கிற்கு மூக்குத்தியும் மூக்கின் உள்ளிடத்து உள்ள, மூக்குத்தண்டின் கீழ், தொங்கும் புல்லாக்கும் அணிந்தனர். அது முத்தாலாகிய புல்லாக்கு; அது தலைகீழாகத் தொங்குவதை அடிகளார், தற்குறிப்பேற்ற அணியாக அமைத்து, தமிழ் மக்களுக்கு அரிய விருந்தாகத் தந்துள்ளார்.

அதாவது மூக்கணி தொங்குவது; அவ்வணி முத்தாலானது. 'முத்து' மாயையின் பல்லின் வெண்ணிறத்துக்கும் ஒளிக்கும் தன்மைக்கும் ஒத்த நிலையான உவமை; இவரின் பற்கள், முத்தினது குணங்களினும் மேம்பட்டு முத்தை இகழ்கின்றன. அவ்விகழ்ச்சியைப் பெறாத முத்து, பற்களின் மேல் வருத்தங்கொண்டு, அது தன்னிகரற்று வாழ்கின்ற வாய்க்கு முன்னாகப் போய், 'உன் இகழ்ச்சியை என்னாற் பொறுத்தற்கு இயலவில்லை. எனக்கு நாணத்தைத் தருகின்றது. இதோ இறந்து போகின்றேன்'. எனவுரைத்து ஞான்று கொண்டு (தூக்கிட்டுக் கொண்டு) தொங்குவது போல் தோன்றும்படி, ஒருத்தி மாயைக்கு மூக்கணி இட்டாள் எனக் கவிதை தந்த சிவப்பிரகாசர் சிந்தனை - கற்பனை - படித்து இன்புறுதற்குரியது. அப்பாடல் :-

தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழிசார
மன்னி அங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்னிறந்திடுவேனெ ஞான்று கொள்முறைமை
என்ன வெண்மணி மூக்கணி ஒருத்தி நின்றிட்டாள்.

இப்பாடல் கற்பனையின் தலைமணியாகத் திகழ்வதாகும். இப்பிரபுலிங்க லீலை அரிய நுண்கருத்துக்கள் கொண்டு செறிவுடன் 'எல்லாப் பொருளும் இதன்பால் உள்ளன' என்னும் கூற்றுக்கு இலக்காக விளங்குகிறது.

உவமைநயத்தில் 'கற்பனை மிக்கு' ஓங்கிய நிலையை மேலும் பல பாடல்களில் காணலாம். 'கற்பனைக் களஞ்சியம்' என்னும் அடைமொழி, சிவப்பிரகாசர்க்கு உரியதை மேற்கண்ட கவிதைகள் மூலமாக அறிந்து இன்புறலாம். தருமையாதீன வெள்ளியம்பலவாணத் தம்பிரானின் நன்கொடை இவரது தமிழ்!

சிலம்பும் குறளும்

ஆறுவிரல் ஐம்பொறி

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!

இவ்விரு அடிகளும் சிலப்பதிகாரத்தில் மனையறம் படுத்த காதையில் 73, 74ஆம் அடிகளாக உள்ளன. கோவலன் கண்ணகியைப் பாராட்டும் இவ்விரண்டு அடிகளில் மெய், வாய், நாசி, கண், காது என்ற ஐம்பொறிகள் அடங்கியுள்ளதைக் காணலாம். குற்றமற்ற பொன் போன்ற மேனியை உடையவள் கண்ணகி என்பதால் 'பொன்னே' என்பதில் மெய்யைக் காணலாம். முத்து போல சிரிப்பவள் கண்ணகி என்பதால் 'முத்தே' என்பதில் வாயைக் காணலாம். மலர் போல பழுதற்ற மணத்தைப் பரப்புபவள் கண்ணகி என்பதால் 'விரை(மலர்)யே' என்பதில் கண்ணைக் காணலாம். தேன் போன்ற மொழி பேசி காதில் கேட்கச் செய்பவள் கண்ணகி என்பதால் 'தேனே' என்பதில் செவியைக் காணலாம்.

பொன், முத்து, விரை, கரும்பு, தேன் என ஐந்து பொருட்களை முறையே நுகரும் மெய், வாய், நாசி, கண், காது என ஐம்பொறிகளையும் கூறிக் கோவலன் கண்ணகியைப் பாராட்டுகின்றான். கோவலன் கூறிய ஐந்து பொருட்களையும் அவற்றை நுகரும் ஐந்து பொறிகளையும் திருக்குறளிலும் காணலாம்.

பொன் :- பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து–155.
மெய் :- மெய்தீண்டல் உடற்கின்பம்–65.
முத்து :- முறிமேனி முத்தம் முறுவல்–1113.
வாய் :- செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்–91.
மலர் :- வெள்ளத்தனைய மலர்நீட்டம்–595.
நாசி :- மூக்கில் கரியார் உடைத்து–277.
கரும்பு :- கரும்புபோல் சொல்லப் பயன்படும் கீழ்–1078.
கண் :- கண்ணோட்டம் இல்லாத கண்–574.
தேன் :- பாலொடு தேன் கலந்தற்றே–1121.
காது :- செவிக்குணவு இல்லாத போது–412.

ஐம்புலன்களும் அரிவையிடம் உள்ளன என்பதைத் திருவள்ளுவர் ஒரே குறட்பாவில் மொழிந்துள்ளார். இதோ அக்குறட்பா.

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள. குறள்–1101.

இவ்வைம்புலன்களையே கோவலன் தன் அன்பு மனைவி கண்ணகியிடம் கண்டான்.

அலையிடை பிறவா அமிழ்தே என்கோ?
மலையிடை பிறவா மணியே என்கோ?
யாழிடை பிறவா இசையே என்கோ?

எனக் கட்டுரைகள் பலப்பல கூறிப் பாராட்டினான். மனைவியொடு மகிழ்வுடன் இல்லறத்தில் திளைத்தான்.

மனிதரில் ஒரு புனிதர்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

உருவத்தால் உயரத்தைப் பெறாதி ருந்தும்
ஒழுக்கத்தால் லால் பகதூர் ஓங்கி நின்றார்!
பிரதமராய் அவர்பதவி வகித்தபோது,
பேசுவதற்கும் ஒப்பந்தம் செய்வ தற்கும்
பரிவோடு ருஷ்யாவும் அழைத்த தாலே
பயணத்தை மேற்கொண்டார்; மனைவி கெஞ்சி,
"அருகிருந்து நெஞ்சுவலி கொண்ட உம்மை
அடர்குளிரில் பராமரிக்க வருவேன்!" என்றார்.

"இன்பஉலா அல்லஇது; வரிப்ப ணத்தில்
எப்படிநீ உடன்வரலாம்? எனமறுத்துத்
தன்உதவி யாளருடன் பயண மானார்.
'தாஷ்கண்டின் ஒப்பந்தம்' வெற்றி யோடு
மென்மையுடன் நிறைவேற, கரங்கு லுக்கி
விடுதியதன் தனியறைக்கே உறங்கச் சென்றார்;
பின்னிரவில் நெஞ்சுவலி பலமாய்த் தாக்க,
பேசுவதற்கும் இயலாமல் துடிது டித்தார்!

எப்படியோ தள்ளாடி எழுந்து சென்றே,
எதிர்அறையைத் தட்டி அங்கே அயர்ந்து தூங்கும்
ஒப்புக்குத் துணைவந்தோ னிடத்தில் சொன்னார்;
உடன்அவனும் ஆங்கிலத்தில் உதவி கேட்கத்
தப்பாக அதைப்புரிந்தோர் சிகிச்சை நல்கச்
சடுதியிலே வரவில்லை; சாய்ந்தார் செம்மல்!
'இப்படியும் ஒருபுனிதர் இருந்தார், வாழ்ந்தார்'
எனும்காதை மட்டுமிங்கே என்றும் வாழும்!

செந்தமிழ் வாசகர்களிடமிருந்து தரமான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

சங்க காலந்தொட்டு, தமிழர்களின் அடையாளமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்ந்து வருகின்ற தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்கள் புலப்படுத்துகின்ற தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல், மானிடவியல், வரலாற்றியல், அறிவியல் தொழில் நுட்பவியல், கலையியல், சிற்பவியல் முதலான பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் ஆய்வுநோக்கில், தரவுகளின் அடிப்படையில், தெளிவான நடையில் அமைவது எதிர்நோக்கப்படுகிறது.

– ஆசிரியர் –

தொடர்பு முகவரி

ஆசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 October 2014 Post Regd. No. MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, 6575615

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.